உ

சிவமயம்



அமரர்

# திருமதி. சரஸ்வதி கந்தையா

அவர்களின் சிவப்பேறெய்தியமை குறித்த

# ஞாபகார்த்த வெளியீடு

21.09.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aum
Sivaya Nama

# GNANATHTHEN



## In Memory of
## Late
## Mrs. Kandaiah Saraswathy

## 21-09-2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஞானத்தேன்



அமரர்

## திருமதி. சரஸ்வதி கந்தையா

அவர்களின்


சிவபதப்பேறு குறித்த

## ஞாபகார்த்த வெளியீடு

## 21-09-2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



மானுடப்பிறவியின் மாண்பினை உணர்ந்து
இறையடி தொழுதே இல்லறம் நடாத்தி
பிள்ளைகளைப் பெற்று பெருமையுடன் வளர்த்து
அன்பைப் பொழிந்து அறிவையூட்டி
இன்பமாய் வாழ வழி வகுத்து வைத்து
பரம்பொருளை வேண்டி பரமனடி சேர்ந்த
எமதினிய பெற்றோரின் பாதாரவிந்தங்களில்
பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

பிள்ளைகள்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

தோற்றம்
1912 . 01 . 03



மறைவு
2002 . 08 . 16

அமரர்

# திருமதி. சரஸ்வதி கந்தையா

அவர்கள்

## Late
## Mrs. Saraswathy Kandaiah

### திதி வெண்பா

சித்திரபானு திகழ் ஆடி முப்பானொன்(று)
ஒத்த நவமி ஒண்பூர்வம் சுத்தவெள்ளி
வார மனுஷம்சீர் வாய்ந்த சரஸ்வதி
பாரைவிட்டுச் சென்ற பகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
1901 . 04 . 25

மறைவு
1976 . 01 . 19

அமரர்

# திரு. செல்லையா கந்தையா

அவர்கள்

# Late
# Mr. Chellaiah Kandaiah

**தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை**
**தந்தைசொல் மிக்கதோர் மந்திரமில்லை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தொகுத்தவர்

**அருட்கவி சீ. விநாசித்தம்பி புலவர் அவர்கள்**

**ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்**

**நாகேஸ்வரம். அளவெட்டி.**

## மோட்ச தீபம்

சீவாத்மா பரப்பிரம்ம ஜோதியுடன் கலப்பதை விளக்குவது மோட்ச தீபம்.

ஆத்மா, பரஞ்சோதி ரூபமாகியபிரமத்தை ஆராதிக்கும்போது பிரீதியுடைய சர்வாநுக்கிரகராகிய சிவபெருமானின் அநுக்கிரகம் பெற்றுப் பிரகாசிக்கிறது. பின் நூற்றுக்கு மேற்பட்ட தலைநாடி வழியாக ஒளிவடிவான பிரமத்தை அடைகிறது.

ஏனைய நாடிகள் வழியே இறக்கும் ஆன்மாக்கள் பற்பல ஆசையுள்ளனவாய் மீளப்பிறக்கும. அவை, ஒளிவடிவில் சந்திரனுக்கும், மின்னலுக்கும் ஏனைய மண்டலங்களுக்கும் மாறிமாறி பற்பல பருவங்களைக் கழித்து சிவகணாதிபர் பிரப்பிரம்ம ஜோதிக்கு வழி காட்ட பிரமத்துடன் ஐக்கியமாகும்.

கிரியைகளை சிவமேதம் பித்துரு மேதம் என இருவகையாகப் பிரிக்கலாம். சிவமேதம் - பூர்வம் உத்தரமென இருவகைப்படும். பித்துருமேதம் பூர்வ அபரம் என இருவகைப்படும்.

சிவம் என்றால் லிங்கம், மேதம் என்றால் ஆராதனை, பித்துரு என்றால் பிதிர் தேவர்கள் - அவர்களுக்குச் செய்யும் ஆராதனையே.

இறந்த ஒருவரின் உடம்பை சிவமேதமென்ற - சிவதீட்சை முதலியவற்றால் பிரேத ரூபத்தை நீக்கி, சிவரூபமாக்கி - சிவபாவ நிவர்த்தியாக சிவாராதனை செய்வதே அந்தியக்கிரியையாகும்.

இந்த அடிப்படையிலேயே மோட்சதீப வைபவம் நிகழ்த்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்சதீபத்தை – சிவாலயங்களிலும், வேறு ஆலயங்களிலும் தமக்கென நியமத்த சமாதிகளிலும் வைக்கலாம்.

உடம்பாகிய வீட்டுக்குள், உள்ளத்தைத்தகளியாக்கி, அறிவுணர்வாகிய நெய்யைவிட்டு, உயிராகிய திரியை வைத்து – ஞானத்தீயினால் விளக்கிடவேண்டும். இதனை திருநாவுக்கரசர் தேவாரத்தினால் அறியலாம்.

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே

என்பர் தேவாரம்.

ஒரு புதிய மண் பாத்திரத்தில் அரிசி அல்லது தினைமாவுடன் சர்க்கரை தேன் கலந்து சட்டியிலிட்டு நெய்யூற்றி – சுத்தமான பருத்தித்திரி 5 பிரிவாக எரியச்செய்து – நடுவில் பெரியதிரியிட்டுச் சங்கற்பம் செய்து, பிதிர் – மாதுர் கடமைகளைச் செய்பவர் ஏந்தி வர மங்கள வாத்தியத்துடன் – சிவநாமம் ஒலிக்க – குறிப்பிட்ட ஆலயத்துக்கு எடுத்துச்செல்ல வேண்டும். அங்கே ஆலயத்துள் குரு சிவபாத்திரமாகவும் – தீப ஏந்தியவர் – மோட்சமடையும் ஆன்மாவாகவும் பாவித்து பாடல்களை முறையேபாடி முடித்து – மோட்சதீபம் இறைவன் அடியில் சேர்ப்பிக்கப்படவேண்டும்.

பொதுப்பாடல்

மாட்சிசேர் கைலை வாழும்
மாமறைச் சிவனே வந்து
சாட்சியாய் குருவாய் லிங்க
சங்கமன் தானே யாகும்.
தாழ்ச்சியொன் றில்லா வீர
சமயமெய் முத்தி பெற்ற
மோட்ச தீபத்தின் செய்தி
முறைமையாய் உரைசெய்வோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் – மேகராகக்குறிஞ்சி

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்(டு) ஐம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான்
அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்கும்
திருவையாறே.
(சம்பந்தர்)

சீடன் (ஆன்மா) (மோட்சதீபம் ஏந்தி வந்தவருக்காக இன்னொருவர் பாடலாம்)

பண் – கொல்லி

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனேபரமயோகி
எத்தினாற் பத்திசெய்கேன் என்னை நீ இகழ வேண்டாம்
முத்தனே முதல்வாதில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாஉன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே

கருத்தனாய்ப் பாடமாட்டேன் காம்பனதோளிபங்கா
ஒருத்தரால் அறியவொண்ணாத் திருவுடைய சோதீ
திருத்தமாம் தில்லைதன்னுள் திகழ்ந்தசிற் றம்பலத்தே
நிருத்தம் நான் காணவேண்டி நேர்படவந்தவாறே.

திருக்குறுந்தொகை

பண்ணினேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணினார்வலம் செய்மறைக் காடரோ
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே.
(அப்பர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டருக்கரியாய் போற்றி அடியவர்க்கெளியாய் போற்றி
வண்டமிழ்ப் பாண்டி நாடு வாழமண் சுமந்தாய் போற்றி
கண்டனக்கினிய மேனிகாட்டிஎன் சென்னிமீது
முண்டகத் திருத்தாள்வைத்த முத்தனே போற்றி போற்றி
(திருவாதவூரடிகள் புராணம்)

**மோட்ச தீபப் பாடல்**

குரு (இறைவன்)

ஆரடா? இருளி லிங்கே
அருள்புரி பெரிய செம்பொன்
சீர்பெறு ஞானவாயில்
திகழ் கயிலாயம் வந்தாய்
பேர் பெறு பாச மென்னும்
பெரிய நம் கபாட முன்பு
நேரினில் வந்த செய்தி
நீயெமக் குரை செய்வாயே.

சீடன் (ஆன்மா)

வேதன்மால் தேடிக் காணா
விண்ணவர்க் கரசே உன்றன்
பாதமே போற்றி செய்யப்
பரிவுடனடிமை வந்தேன்
போதகப் பொருளே! நாயேன்
புரிபிழை பொறுத் தருள்வாய்
பாதக மனைத்தும் தீர்த்துப்பரகதி யருளு வாயே

குரு (இறைவன்)

அருளுவா யென்று கூறும்
அன்பனே யறையக் கேளாய்
பொருள்களோ டன்றி மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஷண வகைகள் கொண்டே
இருளற வெதிரே வந்திங்
கிணையடி தன்னைப் போற்றி
அருள்பெற வந்த செய்தி
அடைவுட னுரை செய்வாயே.

சீடன் (ஆன்மா)

துன்னுகல் லெறியும் வில்லின்
தொடர்அடி உதையுமன்பால்
மன்னிட ஏற்றே ஆண்ட
மாண்பினை யடிமை யெண்ணி
மன்னவா விண்ணோர் போற்றும்
மலையக வாசல் வந்தேன்
என்னை நின்பத நிழற்கீழ்
இருத்தி யாட் கொள்ளுவாயே.

குரு (இறைவன்)

ஆளென்று சொல்லுகின்ற
அன்பனே அகமகிழ்ந்தேன்
சூழ்கின்ற நினது மாயத்
தொடரறுத் தடிமைகொள்ள
வாள்கொண்ட நந்தி போற்றும்
வானுயர் கபாடந் தன்னில்
தாழ்வின்றி வெண்ணெய் வாங்கித்
தகையுடன் வீசுவாயே.

(வெண்ணெய் உருண்டை அல்லது வாழைப்பழத்தைக் கபாடத்தில் வீச வேண்டும்)

கபாடம் = கதவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சீடன் (ஆன்மா)

வீசுவாய் வெண்ணெ யென்று
விமலனா ருரைத்த போது
பாசமா யைக ளறுத்துப்
பதமலர் அடைய வந்தேன்
நேசமா யாடிப் பாடி
நெறியுடன் வெண்ணெய் வாங்கி
ஆசிலாக் கபாடம் தன்னில்
அன்புடன் வீசினேனே.

### சிவன் (குரு)

வந்து முன்னிற்கு மன்பன்
வருந்திடா வண்ண மின்னே
நந்தி நீ சென்று கண்டு
நன்மொழி பலவியம்பி
மைந்தனே! மனமிரங்கேல்,
வருகென அழைத்துக்கொண்டு
சிந்தையார் வத்தி னோடுடன்
திருப்பதம் காட்டுவாயே.

### சீடன் (ஆன்மா)

ஏறிந்தனன், ஈசா! அன்பால்
ஏத்துவார் முத்தி சார்தல்
அறிந்து நற்பிராண லிங்கம்
அன்பொடு பூசை யாற்றிப்
பிறிதொரு பொருளு மெண்ணாப்
பேரின் பவாழ்வை எண்ணிச்
செறிந்து வந்தடைந் தேனென்றன்
திருவடி நல்குவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு (பொதுப்பாடல்)

என்று நற் புதல்வன் கூற,
இறையவன் மனமகிழ்ந்து
நன்றென நகைத்தென் பாதம்
நாமுமக் களிப்போ மென்று
குன்றினிற் கணத்தை நோக்கிக்
கூட்டிவா வென்று கூற
சென்றவர் வரவழைத்துச்
சிவபத முய்ப்பித் தாரே.

(மோட்சதீபம் ஆலயத்துள்சேர்தல்)

சிவன் (குரு)

உய்த்தவு முமையோர் பாகன்
உவந்தடி யவனை நோக்கி
எத்தனை குற்ற மேனு
மெனதடி யவர்கள் செய்யின்
அத்தகு குற்ற மெல்லா
மன்பெனும் மலரே யாகும்
சித்தம்நீ வருந்தல் வேண்டாம்
திருப்பதம் நல்கினேனே.

(பூசை நிகழ்த்தல்)

சரணம் (சீடன்)

ஆராதனை செய்யடியார் சரணம்
அருள் சேர்முக மாறுடையாய் சரணம்
பாரோர் புகழும் பரனே சரணம்
பவதக்கன் வீழ்படையாய் சரணம்
தீராதீரி நேத்திரனே சரணம்
சிவசங்கமர்கள் தேவா சரணம்
வீராகமநூல் விஜயா சரணம்
வீரேசுரனே சரணம் சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

பொன்னெடுங் கயிலைமேவும் பூரணா பரமயோகி
என்னையும் நின்கழற்கீழ் இருத்தியாட் கொள்வாயென்று
நின்னருள் மோட்சதீப நிகழ்ச்சியை பாடலுற்றேன்
இன்னல நூலையுன்றன் இணையடி சூட்டினேனே.

## ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்

1) கடவுளோடு பிணங்கிக்கொள்ள உனக்கு உரிமை உண்டு. இறைவா, என்னைப் படைத்தவன் நீ ஆதலால் உனது திவ்ய தரிசனத்தை எனக்குக் காட்டியருளவும் நீ கடமைப்பட்டி-ருக்கின்றாய் என்று அவரோடு போராடு.

2) பக்தன் ஒருவன் பகவான் மீது தீவிரமான விசுவாசம் வைக்க வேண்டும். நான் பகவானுடைய திருநாமத்தை உச்சரித்திருக்கிறேன். பாபம் எங்ஙனம் என்னை வந்து சாரப்போகின்றது? இனி உனக்குப் பாபம் ஏது? பந்தம் ஏது? இத்தகைய விசுவாசம் உடையவனே தலைத்தரமான சாதகன் ஆகின்றன்.

3) மண்ணாலான ஒரு விக்கிரகத்தின் மூலம் கடவுள் வழுத்தப்படுகின்றர் என்றால் மனிதன் மூலம் அவரை ஏன் வழுத்தலாகாது?

4) பகவானை நாடி யார் கண்ணீர் சிந்துகின்றானோ அவன் பகவானைக் காண்பான்.

5) சாகும்பொழுது அன்புடன் ஈசனுடைய நாமத்தை உச்சரிக்க வல்லனுக்கு அபாயம் ஒன்றுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயணர் கவசம்



# நாராயணர் கவசம்

## மனோன்மணி கவசம்

ஆக்கியோன்
அருட்கவி சீ. விநாசித்தம்பி புலவர்

### காப்பு (கணபதி)

எங்கு மாகி இருந்தவன். சங்கரன்
மங்க ளாம்பிகை மைந்தன். விநாயகன்
சங்கு சக்கரன் தழுவும் மருமகன்
துங்க வல்வல்லபை துணைவனைப் போற்றுவாம்
(நாராயணர்)

செல்வ நாரணன் திருமகள் நாயகன்
சொல்வ ளந்தரு தோத்திரக் கீதையன்
வல்வி னைத்தொகை வஞ்சனை தீர்ப்பவன்
நல்வ ரக்குரு நாதனை யேத்துவாம்.

நாராய ணாய நமஎன்று நாச்செபிக்கத்
தீராத துன்பங்கள் தீருமே - வாராத
சக்திவரும் சித்திவரும் தத்துவஉற் பத்திவரும்
புத்திவரும் இன்பம் பொலிந்து

பொன்னுயர் கோகு லத்துப்
புண்ணியா கண்ணா எங்கும்
மன்னிய உலக கோடி
வந்தளந் தெடுத்த வாமா
உன்னிய வடிவில் தோன்றி
உத்தமர் நெஞ்சி ருந்து
முன்னிய வரங்கொ டுக்கும்
முகுந்தனே போற்றி போற்றி

மலைகளேழ் தீர்த்த மீரேழ்
வளந்தரு வேங்க டத்தின்
தலைவனார் மனத்தைக் காக்க
தாங்கிய சிகைசேர் சென்னி
1வலவனார் காக்க யோகம்
வழங்குமுந் நாடி நெற்றி
நலமொ(டு) ஐ வர்க்குத் தூது
நடந்தஅச் சுதனார் காக்க.

1. பார்த்தசாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிகளைத் திருமால் காக்க
திகழொளி விழியி ரண்டும்
குவலயம் புரக்க வந்த
கோவிந்த ராசன் காக்க
தவமுணர் நாசி தன்னைச்
சாரங்க பாணி காக்க
உவமையில் லாத வாயை
உமையவள் தமையன் காக்க.

எயிறுக ளிராமன் காக்க
இசைதரு நாவை வெண்ணெய்
நயமிகத் திருடும் கிருஷ்ணன்
நற்பதம் வைத்துக் காக்க
முயல்வுறும் அதரம் கன்னம்
மோகனக் குழலன் காக்க
செயல்புரி மூளை எல்லாம்
திரிவிக்ர மக்கோன் காக்க.

பிடரியை ஆதி சேடப்
பெரும்பள்ளி கொள்வோன் காக்க
திடமிகு மண்டை என்பை
[2]ஜெயசௌரி ராஜன் காக்க
மிடறொடு தொண்டை அண்ணம்
[3]வித்துவக் கோட்டன் காக்க
தொடருறு முள்ளந் தண்டை
துவாரகை மன்னன் காக்க.

பலனுயர் தோளி ரண்டும்
பரவைஆல் துயின்றோன் காக்க
பொலிதரு கையி ரண்டும்
புவிமகள் கணவன் காக்க
கலைதரு விரல்க ளெல்லாம்
கருடவா கனனார் காக்க
அலைவிலா மார்பெ லும்பை
[4]ஆதிகே சவனார் காக்க

2. *திருக்கண்ணபுரம்*
3. *பஞ்சபாண்டவர் பூசித்ததலம்-அம்பரீசன் முத்தியடைந்த தலம்*
4. *அட்டபுயகரம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதரமும் உணவு றுப்பும்
ஓங்கிய வராகன் காக்க
முதலுணர் குறியு றுப்பை
மோகினி யானான் காக்க
பதிவுறு பிருட்டம் பாதம்
[5]பக்தவத் சலனார் காக்க
குதம்மல சலக்கு மாய்கள்
கோபியர் நாதன் காக்க.

குரல்வளை கூர்மன் காக்க
கோலமார் கழுத்தெ லும்பை
அருள்பல ராமன் காக்க
ஆறாத இருத யத்தை
புருஷோத்த மச்செங் கண்மால்
புஜங்கமேற் கிடந்து காக்க
வருகுவா சத்தொகுப்பை
மகரமீ னானான் காக்க.

பழுவுடன் இடுப்பு மூலம்
பற்றிடு தொடைகள் கால்கள்
மழுவளை திகிரி ஏந்தும்
வரதரா ஜேசன் காக்க
மொழிமுழங் கால்மு ழங்கை
முன்வேக நதிக்கு றுக்கே
வழியடைத் துக்கி டந்த
மகா[7] யதோக் தகாரி காக்க

செவிடுகண் குருடு சித்தம்
செயற்படாத் தடுமாற் றங்கள்
கவலுடைக் கூனு றாமல்
காளிங்க நடனன் காக்க
தவறிடு பக்க வாதம்
தசைநரம் பிழுநோ யின்றித்
தவமுடை யோர்க ளேத்தும்
சக்கரத் தாழ்வார் காக்க.

5. திருக்கண்ண மங்கை - இலட்சுமிவனம்
6. ஆமை அவதாரம்
7. திருவெஃகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மைகண் ணோய்கி ரந்தி
 அழற்படு சரும ரோகம்
விம்முறு புற்று ரோக
 வியாதிகள் அணுகா வண்ணம்
வெம்முலை யுண்டு பேயை
 வீழ்த்திய வீரன் காக்க
செம்மலர்ச் செல்வி பாகன்
 [8]சீவயத் திரத்தைக் காக்க.

பன்னகம் செய்யான் பூரான்
 பாய்புலி முகச்சி லந்தி
முன்னிடு தேள்கொ டுக்கன்
 முதலிய விஷங்க ளாலே
இன்னலுற் றேங்கி டாமல்
 இருமரு திடைத வழ்ந்து
தொன்னெறிச் சாபம் தீர்த்த
 துளசிதோய் மார்பன் காக்க.

கொடும்புலி சிங்கம் யானை
 குத்திடும் எருமை பன்றி
கடும்சினக் கரடி செந்நாய்
 காடுவாழ் மிருக வர்க்கம்
அடுமிட ரிலாமல் கண்ணா
 அபயமென் றழைத்தா னுக்கு
நெடுநர சிங்க மாகி
 நின்றருள் புரிந்தோன் காக்க.

வஞ்சசெய் வினைகள் ஆவி
 வாட்டுபேய் வசைம ருந்து
வெஞ்சல மலவி யாதி
 விழுவலி மயக்கம் குன்மம்
நஞ்சுபல் லாயு தம்தீ
 நடுங்கிடி மின்னல் தண்ணீர்
சஞ்சல மிழையா தைந்தீர்
 [9]தலையனை யழிந்தேன் காக்க.

8. மூலக்கனல் எழும்பும் வஷஸல என்ற நாலெழுத்து அதழ்களையடைக கமல வடிவம்
9. ஐந்தீர்தலையன் - இராவணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஞ்சிடு கொலைகள் காமம்
வெகுளியா யினசூ ழாமல்
மஞ்சுயர் வைகுந் தத்தின்
மகாநதிபன் கண்ணாற் காக்க
அஞ்சிடு கால தூதர்
அடியனை வருத்த வந்தால்
கஞ்சனை வதைத்த வீரக்
கதாயுதன் கடிது காக்க

பகலிராத் திசைக ளெங்கும்
பழவிள வெறிந்தோன் காக்க
அகமுடல் வாக்கால் நீதி
அலாதன புரியா(து) ஆயர்
துகிலினைக் களவெ டுத்த
சுந்தர மாயன் காக்க
இகபர சுகம்சி றக்க
இலட்சுமி காந்தன் காக்க.

தனம்கலை மனைவி மக்கள்
தழுவிய சுற்றம் நட்பு
கனமிகு வளந லங்கள்
கவினுயர் ஆத னூரில்
தினமரக் கால்த லைக்கீழ்
சீரெழுத் தாணி ஓலை
நினைந்துகைக் கொண்டு றங்கும்
நீண்டகோ தண்டன் காக்க.

மனைமகார் சொந்தம் வைத்த
மணிநிதி யனைய பந்த
வினையலை யாழி நீந்த
வித்தக நரகன் மாள
முனையுறு நேமி விட்ட
முதுமது சூதன் காக்க
எனதியான் இல்லாப் பண்பை
எழிற்பரிக் கல்கி காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பெனும் நீர்பெ ருக்கி
அறிவெனும் பயிர்வி ளைத்துத்
துன்பஊழிக் களைபி டுங்கிச்
சுடர்மணிக் கதிரெ டுக்க
முன்பவை தங்கை சேலை
மூடனுற் றுரிந்த வேளை
மின்பல துகில வித்த
வேத [10]ஸ்ரீ மூர்த்தி காக்க

புலனைந்து பொறிக ளைந்து
பொருந்துபூ தச்ச ரீகம்
வலிவுறும் அங்க மெல்லாம்
மலைக்குடை எடுத்தோன் காக்க
கலையெல்லாம் கற்ற பேற்றால்
கசிந்துணர் அறிவைக் காணும்
நிலைமையை வீணா பாணி
நெடுமாம னுதவிக் காக்க

வாயுவோர் பத்தும் பாய்ந்து
மலருமா றாதா ரத்தில்
தோயும்ஐ யுணர்வொன் றாகிச்
சுழுமுனை நடுவெ ழுந்த
தேயுபோய்ச் சகஸ்ரா ரத்தின்
சிரவெளித் துவாத சாந்தம்
ஆயவீ டினது றங்க
அரிய[11] செங் குன்றோன் காக்க

எத்தனை பிழைசெய் தாலும்
எழுநர கைத்த டுத்துத்
தத்துவ பரசு ராமத்

10. ஸ்ரீ மூர்த்தி - சாளக்கிராமத்தில் மும்மையும் காக்கக் காக்க
11. தருமர் பகவானைப் பிரதிஷ்டை செய்து மனச்சாந்தி பெற்ற தலம்முருகன் சூரனை, சேவல் மயிலாகக் கொண்ட தலம்
12. அத்தி - யானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாபரன் காக்க முன்னாள்
12 அத்தியின் துயர்து டைத்தோன்
ஆவியின் துணையாம் பாத
முத்திரை தலைவைத் தென்னை
அற்புத நடன மாடி
அசுரரை யடக்கி யாண்ட
கற்பக மேகா குத்தா
கனிந்தநின் கவசந் தன்னை
சொற்பொ ருணர்ந்து நித்தம்
தோத்திரம் புரிவார்க் கெல்லாம்
நற்பலன் நயந்து காக்க
நமோநா ராய ணாய.

**பயன்**

வரப்பல னருளும் நாக
வரதநா ராண னன்தன்
திருப்பதம் நினைந்து நித்தம்
தீமைவா ராம லன்னான்
அருட்கவி யிவைக ளோதும்
அடியவா சுகம்ப டைத்துக்
சுருக்கடல் நீந்திக் கண்ணன்
கழல்நிழல் வாழு வாரே.

**அமுது மொழி**

உங்கள் தோல்விகளை நினைத்துப் பார்த்து ஏன் தோற்றோம் என்று ஆராய்ந்து தோல்வியின் காரணத்தை தவிர்த்து வெற்றியடையுங்கள் என்கிறார்கள். அதற்குப் பதிலாக உங்கள் வெற்றிகளை ஆராயுங்கள் அவற்றுக்குக் காரணமாக இருந்த பண்புகளையும் பின்பற்றுங்கள். தொடர்ந்து வெற்றியடைவீர்கள்.

- ஹல்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சிவ மனோன்மணியம்மை கவசம்

## காப்பு

ஆதி மனோன்மணி அம்பிகை புத்திரன்
சோதி விநாயகன் துணையடி தொழுவோம்

இமயத் தமர்ந்த இறைவன் பாக
உமையே பார்வதி உத்தமி போற்றி
சொல்லும் பொருளும் சுரப்பாய் போற்றி
அல்லல் தீர்க்கும் அழகியே போற்றி
அருவுரு வாகிய ஆத்தாள் போற்றி
திருவருள் பொழியும் சிவையே போற்றி
சிங்கத்தமர்ந்த தேவியே போற்றி
செங்கம லாசனத் திருவே போற்றி
தண்கலை வழங்கும் சரஸ்வதி போற்றி
எண்குண நாயகி ஈஸ்வரி போற்றி
தத்துவா தீத சாம்பவி போற்றி
நித்தியா னந்த நிரஞ்சனி போற்றி
தொண்டரைக் காக்கும் சோதியே போற்றி
மண்டலம் நிறைந்த மகேஸ்வரி போற்றி
கன்னியே மனோன்மணிக் கற்பகம் போற்றி
என்னித யத்தில் இருப்பாய் போற்றி

எமதுயிர் தம்மை இயமனை உதைத்த
அமிர்த கடவூர் அபிராமி காக்க
சென்னியை ஆரூர் சிவகம லாம்பிகை
பொன்னடி வைத்துப் பொலிவுடன் காக்க
தகுவிழி யிரண்டும் தண்ணா னைக்கா
அகிலாண் டேஸ்வரி அருளுறக் காக்க
இருசெவி தன்னை எழில்அவி நாசிக்
கருணாம் பிகையாம் காரணி காக்க
பண்ணிசை வாயைப் பரவும் அண்ணாமலை
உண்ணா முலையாள் உள்நின்று காக்க
திருநீ றணியும் திலக நெற்றியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமமீ னாட்சித் தாயார் காக்க
சீரணி நாவைச் சிருங்கேரி சாரதா
ஆரண கலைகளை அருளிக் காக்க
பல்லும் அண்ணமும் பராபரி கற்பக
வல்லி காக்க வழுவில் லாமல்
உதடுகள் இரண்டும் உருத்திரி காக்க
இதயம் தன்னை இலட்சுமி காக்க
சுவாச நாசியைச் சூலினி காக்க
கபால மெல்லாம் காமாட்சி காக்க
மலையி லுதித்த மங்கள பகவதி
சிலைதரு தோளைத் திறல்மிக் காக்க
எலும்பு நரம்புகள் இணைதசை உரோமம்
நலந்தரு தையல் நாயகி காக்க
ஆய தொண்டையை அணிஅறம் வளர்த்த
நாயகி காக்க நயந்தஆ மாத்தூர்
முத்தாம் பிகையார் முன்மார்பு காக்க
நித்தம் சுவாசம் நிகழ்த்தும் உறுப்பை
தில்லையி லாடும் சிவகாமி காக்க
வல்ல ஒற்றியூர் வடிவுடை யம்மை
வயிற்றைக் காக்க மருவுமுள் ளெலும்பை
இயற்கை மலைவளம் இசைந்த காளத்தி
ஞானப்பூங் கோதை நல்லாள் காக்க
தானம் தவங்கள் தருபயன் செழிக்க
கேதா ரத்தில் கீர்த்திநோன் புற்ற
ஆதார சக்தி அர்த்தநா ரீஸ்வரி
கருதிடும் ஆண்பெண் கருவாய் காக்க
வருமபா னத்தை வல்லபை காக்க
இருந்திடு பிருட்டம் இரத்த பீஜனின்
பெருந்தலை யறுத்த பெருங்காளி காக்க
நற்றமிழ் கேட்க ஞானப்பால் கொடுத்தவள்
பற்றிரு முளையைப் பரிந்து காக்க
வலிவுறு கால்தொடை மகிடனை வாளால்
கொலைபுரிந் தருளிய குமாரி காக்க
பாதமும் விரல்களும் பாற்கடல் துயிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவன் தங்கை வராகி காக்க
கைகளும் விரல்களும் கணேசனைத் தந்த
மைவிழி துர்க்கா மகாசக்தி காக்க
பொருந்திய உடம்பெலாம் பொருப்புயர்கைலை
இருந்துயிர் புரக்கும் இராஜ ராஜேஸ்வரி
உமைசிவ சக்தி ஓங்கார ரூபிணி
அமையும் சுகந்தந் தன்புடன் காக்க
முற்றும் ஐம்புலன்கள் மோனவீ டுறங்க
வெற்றிவேல் கொடுத்த விமலை காக்க

வஞ்சனை வசியம் வாட்டும் பேய்ப்பிணி
நஞ்சுகள் இவற்றால் நலிவுறா வண்ணம்
தந்திர வேத சாவித்ரி காக்க
எந்திரம் இடிமின் எதிர்ப்படு விலங்குகள்
நாக வினங்கள் நச்சுப் பூச்சிகள்
வேகுதீ நீர்வழி வெந்துயர் படாமல்
வித்தகக் காசி விஸ்வலிங் கேசன்
சக்தி விசாலாட்சித் தாயாபரி காக்க
புத்திக் குழப்பம் புற்றுநோய் அம்மை
பித்தம் வாதம் பெருகு சிலேற்பனம்
குத்துக் குன்மம் குலைரியரி சூலை
மெத்தக் குறையும் விக்கின இரத்தநோய்
சலமல மூச்சுச் சஞ்சலம நரம்புநோய்
தலைவலி சோகை பெருவலி மூலம்
கரப்பன் திரள் புண் கண்டம் வாய் கண்
பரப்பும் கிரந்தி பயில்மூ ளைச்சளி
எனும் பல நோயால் இடர்ப்படா தெம்மைக்
கனநிழல் வேம்புக் கரகத் திருக்கும்
சந்திரசொரூபி தவமுத்து மாரி
மந்திரமருந்து வழங்கிக் காக்க
அக்கினிக் குண்டம் அமைந்த வேள்வியில்
தக்கனின் தலையைத் தறித்தாட் டுத்தலை
நல்கிய வீரனின் நடனபத்தினி
சொல்சுக வாழ்வைச் சுரந்து காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகோள் நாளால் நலியா வண்ணம்
பவநெறி விதிக்கும் பவானி காக்க
பூவும் நீரும் பொலிதிருத் தொண்டும்
நாவினா லுன்புகழ் நயந்துபா டுதலும்
அன்புமடக்கமும் அறமுறைச் சிந்தையும்
நின்பதப் பூசையும் நித்தியம் பேணக்
கண்ணருள் பொழிந்து காயத்ரி காக்க
திண்ணிய பாசம் திருகூ லமுடன்
காலன் வருமக் காலம் வந்துநின்
கோலங் காட்டிக் குளிர்பதம் தருவாய்
வெம்மா மலவிருள் விலக்குவாய் சரணம்
அம்மா மனோன்மணி யாடியிணை சரணம்
ஐம்பத் தோரேழுத் தானாய் சரணம்
நம்பன் நமசிவய நாடகி சரணம்
சாதாசிவ சோதிச் சங்கரி சரணம்
பதாம்பு யந்தரும் பராசக்தி சரணம்
உனைமற வாவரம் உதவுவாய் சரணம்
நினைவார் நெஞ்சினில் நிற்பாய் சரணம்
குறை பொறுத் தருள்வாய் குருமகள் சரணம்
மறைதரு மனோன்மணி மலரடி சரணம்.

அன்புயர் வடிவந் தாங்கி ஆருயிரனைத்துங் காக்கும்
பொன் பொலி கைலைமேவும புகழ்மனோன் மணியே எங்கள்
துன்பங்க ளறிவாயம்மா சுகத்துடன் தமிழர் எல்லாம்
இன்பமாய் வாழும் வண்ணம் இணையடி யருள் செய்வாயே.

**பயன்**

நீரொடு மலர்கள் தூவி நெஞ்சகம் குவிந்து போற்றி
ஆரணி மனோன் மணித்தாய் அருட்கவிக்கவசம் ஓதும்
சீரடி யார்கள் எல்லாம் சிந்தையில் நினைந்த செல்வம்
பாரினிற் பொருந்திமுன்னைப் பவவினை தீருவாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நன்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

(சம்பந்தர்)

உயிராவணமிருந்துற்று1 நோக்கி
உள்ளக்கிழியின் உருவெழுதி
உயிராவணஞ்2 செய்திட்டுன் கையில் தந்தால்
உணரப்படுவாரோ டொட்டி3 வாழ்தி4
5அயிராவண மேறதானே றேறி
அமரர் நாடாளாதே ஆரூராண்ட
அயிராவணமே6 யென்னம்மானே நின்
அருட்கண்ணால் நோக்காதோர் அல்லாரே.

(அப்பர்)

1. உயிராவணம் இருந்து - இடைகலை பிங்கலைகளில் வரும் மூச்சை விடாதபடி இருந்து
2. உயிராவணம் - ஆன்ம சமர்ப்பணம் செய்து
3. ஒட்டி - இரண்டறக்கலந்து
4. இவ்வடிகள் யோக நெறியைப்பற்றிக் கூறுவன
5. அயிராவணம் - இரண்டாயிரம் கொம்புடைய யானை
6. அயிராவணமே - வன்மீகநாதரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

உடையாளுன்றன் னடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் னடுவு ளிருவீரு மிருப்பதானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரி யாய்பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே.

கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய் விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக்கொள்ளே.

## திருவிசைப்பா

உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்
அடுத்தடுத் துரைத்தே உரைத்தும்
கண்டதே கண்டும் கேட்டதே கேட்டும்
கடந்தன கடவ நாளெல்லாம்
விண்ட தாமரை மேல் அன்னம் வீற்றிருக்கும்
வெளியுரு வீதி வெங்காடா
அண்டரே காண அம்பலத்தாடும் ஐயனே!
உய்யுமாறருளே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி எங்கும்குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடையாற்கு வழிவழி யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடியாரொடுங் கூடி எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்.

## திருப்புகழ்

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள் நினைந்திட் டுணர்வாலே
பரவு தரிசனையை எந்தற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியுமன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமானே.

## திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவார்
சிவ சிவ என்னச் சிவகதி தானே.

ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்
கழிந்தேன் கடவுளும் நானும் ஒன்றானேன்
அழிந்தாங் கினிவரு மார்க்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக் கண்டேனே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட
மரபினில் யானொருவனன்றோ வகையறியே னிந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ
இது தகுமோ இது முறையோ இது தருமந்தானோ
மாழை மணிப் பொது நடஞ்செய் வள்ளல் நா
னுனக்கு மகனல்லனோநீ யெனக்கு வாய்த்த தந்தையலையோ
கோழையுலகுயிர்த் துயரம் இனிப் பொறுக்கமாட்டேன்
கொடுத்தருள் நின்னருளொளியைக் கொடுத்தருளிப்போதே.

## தாயுமான சுவாமிகள் பாடல்கள்

இனியே தெமக்குனருள் வருமோ வெனக்கருதி
யேங்குதே நெஞ்சமையோ!
இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையோ!
அநியாய மாயிந்த வுடலைநா னென்றுவரு
மந்தகற்காளாக்வோ
ஆடித்திரிந்து நான் கற்றதுங் கேட்டது
மவலமாய்ப் போனதன்றோ!
கனியேனும வறியசெங்காயேனு முதிர்சருகு
கந்த மூலங்களேனும்
கனல்வ ரதை வந்தெய்தி னள்ளிப் புசித்து நான்
கண்மூடி மௌனியாகித்
தனியேயிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமி நீ யறியாததோ
சர்வ பரிபூ ரண வகண்டதத் துவமான
சச்சிதானந்த சிவமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிரிய பிறவிதனின் மானுடப்பிறவிதா
னியாதனும் மரிதரிதுகா
ணிப்பிறவிதப்பினா லெப்பிறவி வாயக்க்குமோ
வேது வருமோ வறிகிலேன்
கண்ணகனிலத்துநா னுள்ள பொழுதே யருட்
ககன வட்டத்தினின்று
காலூன்றி நின்று பொழியானந்த முகிலொடு
கலந்து மதிய வசமுறவே
பண்ணுவது நன்மையிந் நிலை பதியுமட்டுமே
பதியாயிருந்த தேகப்
பவுரி குலையாமலே கௌரி குண்டலியாயி
பண்ணவி தனருளினாலே
விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே
வேண்டுவேனும தடிமை நான்
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

வாசா கயிங்கரிய மன்றி யொரு சாதன
மனோ வாயு நிற்கும் வண்ணம்
வாலாய மாகவும் பழகியறி யேன்றுறவு
மார்க்கத்தி னிச்சை போல
நேசானு சாரியாய் விவகரிப் பேனந்த
நினைவையு மறந்த போது
நித்திரை கொள்வேன்றேக நீங்குமென - வெண்ணிலோ
நெஞ்சந் துடித்தயருவேன்
பேசாத வானந்த நிட்டைக்கும் மறிவிலாப்
பேதைக்கும் வெகுதூரமே
பேய்க்குண மறிந்திந்த நாய்க்கு மொரு வழிபெரிய
பேரின்ப நிட்டையருள்வாய்
பாசாடவிக்குள்ளே செல்லாதவர்க்கருள்
பழுத்தொழுகு தேவதருவே
பார்க்கு மிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூ ரணானந்தமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தொண்டத்தொகை

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 2

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் பேயார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் அடியார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூ தி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்எறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 6

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நகை அதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதன்மேல் அரவாட ஆடி
பொன்னடிந்த மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 9

பத்தராய் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூ சிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 10

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரின் அம்மானுக் கன்பரா வாரே. 11

## ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்

மக்களிடத்து இயல்பு வேற்றுமையுண்டு. அதை முன்னிட்டு மத வேற்றுமையும் இருந்தே தீரும் ஒரு மதத்தை அநுஷ்டிக்கின்றவன் மற்ற மதத்தைச் சேர்ந்தவர்களிடத்து அலட்சியம் பாராட்டலாகாது. பிற மதஸ்தர்களைத் தனக்குக் கீழானவர்களாகக் கருதுகின்றவன் தானே கீழ்மையடைந்து விடுகின்றான.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

N B



## விஷ்ணு ஆலயங்களில் வசந்த மண்டபப் பூசையில் பாடப்படும் பஞ்சபுராணம்

(தொகுப்பு அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர்)

## தேவாரம் – திருவாய்மொழி

இராகம் - பூபாளம் தாளம்:- ஆதி

தீர்த்தன் உலகளந்த சேவடிமேல் பூந்தாமம்
சேர்த்தி யவையே சிவன்முடிமேல் தான்கண்டு
பார்த்தன் தெளிந் தொழிந்த பைந்துழாயான் பெருமை
பேர்த்தும் ஒருவரால் பேசக் கிடந்ததே (நம்)

இராகம் - நீலாம்பரி தாளம்:- ஆதி

அரியே றேஎன் அம்பொற் சுடரே
செங்கட் கருமுகிலே
எரியே பவளக் குன்றே நாற்றோள்
எந்தாய் உனதருளே
பிரியா அடிமை என்னைக் கொண்டாய்
குடந்தைத் திருமாலே
தரியே னினியுன் சரணந் தந்தென்
சன்மம் களையாயே

இராகம் - ஆகிரி தாளம்:- ரூபகம்

முனியே! நான்முக னே! முக்கண்
ணப்பா என் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக் கட்கரு
மாணிக்கமே! என் கள்வா!
தனியேன் ஆருயிரே! என் தலை
மிசையாய் தவந்திட்டு
இனிநான் போகலொட் டேன் ஒன்றும்
மாயம் செய் யேலென்னையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் - அரிகாம்போதி

நீரகத்தாய் நெடுவரையின் உச்சிமேலாய்
நிலாத்திங்கள் துண்டத்தாய் நிறைந்த கச்சி
ஊரகத்தாய் ஒண்துறைநீர் வெஃகா உள்ளாய்
உள்ளுவார் உள்ளத்தாய் உலக மேத்தும்
காரகத்தாய் கார்வானத்துள்ளாய் கள்வா
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய் பேராதென் நெஞ்சினுள்ளாய்
பெருமான் உன் திருவடியே பேணினேனே. (தி.ம)

இராகம் - கேதாரகௌளை தாளம்:- ஆதி

அண்ணல் செய் தலைகடல் கடந்ததவள்
கண்ணுதல் நஞ்சுணக் கண்டவனே
விண்ணவர் அமுதுண அமுதில் வரும்
பெண்ணமு துண்டஎம் பெருமானே
ஆண்டாயுனைக் காண்பதோர்
அருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனை வாழ்க்கையை
விண்ணகர் மேயவனே. (தி.ம)

இராகம் - ஆரபி தாளம்:- ஆதி

நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்
சீரார் சுடர்கள் இரண்டாய்ச் சிவனாய் அயனானாய்
கூரார் ஆழி வெண்சங் கேந்திக் கொடியேன் பால்
வாராய் ஒரு நாள் மண்ணும் விண்ணும் மகிழவே. (நம்)

இராகம் - காம்போதி தாளம்:- ஆதி

வண்ணமால்வரை யேகுடையாக
மாரிகாத்தவ னே மதுசூதா
கண்ணனேகரி கோள்விடுத்தானே
காரணாகளி றட்டபிரானே
எண்ணு வாரிட ரைக்களை வானே
ஏத்தரும் பெருங் கீர்த்தியி னானே
நண்ணிநா னுன்னை நாள்தொறும் ஏத்தும்
நன்மை யேயருள் செய் எம்பிரானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம் – திருவாய்மொழி

கார்காலத் தெழுகின்ற
 கார்முகில் காள் வேங்கடத்துப்
போர்காலத் தெழுந் தருளிப்
 பொழுதவனார் பேர் சொல்லி
நீர்காலத் தெருக்கிலம்
 பழவிலை போல் வீழ் வேனை
வார்காலத் தொரு நாள்தம்
 வாசகம்தந் தருளாரே (ஆண்டாள்)

மார்வில் திருவன் வலனேந்து சக்கரத்தன்
பாரைப் பிளந்த பரமன் பரஞ் சோதி
காரில் திகழ் காயா வண்ணன் கதிர் முடிமேல்
தாரில் நறுந்துழாய் தாழ்ந்ததாய் கோல் தும்பி (தி.ம)

கோவா கியமா வலியை நிலங்கொண்டாய்,
தேவா சுரம்செற் றவனே! திருமாலே,
நாவா யுறைகின்ற என்நா ரணநம்பீ,
ஆவா அடியா னிவன் என் றருளாயே (நம்)

அடைக்கலத் தோங்கு கமலத்
 தலரயன் சென்னி யென்னும்,
முடைக்கலத் தாண்முன் அரனுக்கு
 தீக்கியை ஆழி சங்கம்
படைக்கலம் ஏந்தியை வெண்ணெய்க்கள்
 ளாய்ச்சிவன் தாம்புகளால்
புடைக் கலந் தானை, எம் மானை யென்
 சொல்லிப் புலம்புவனே?
(திருமழிசை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா – திருவாய்மொழி

கேட்கயான் உற்ற துண்டு
　　கேழலாய் உலகம் கொண்ட
பூக்கெழு வண்ண னாரைப்
　　போதரக் கனவில் கண்டு
வாக்கினால் கருமம் தன்னால்
　　மனத்தினால் சிரத்தை தன்னால்
வேட்கை மீ தூரவாங்கி
　　விழுங்கினேற் கினியவாறே　　　(தி.ம)

தேட்ட ரும்திறல் தேனினைத்தென
　　னரங்கனைத்திரு மாதுவாழ்
வாட்ட மில்வன மாலைமார்வனை
　　வாழ்த்தி மால் கொள்சிந் தையராய்
ஆட்ட மேவி யலந்தழைத்தயர்
　　வெய்தும் மெய்யடி யார்கள்தம்,
ஈட்டம் கண்டிடக் கூடுமேலது
　　காணும்கண்பய னாவதே.　　　(குல)

ஒருவரி ருவரோர் மூவரென நின்று
உருவு காந்துள் ளுந்தோறும் தித்திப்பான்
திருவமர் மார்வன் திருக்கடித் தானத்தை
மருவி யுறைகின்ற மாயப் பிரானே.　　　(நம்)

**ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்**

ஞானமும் பக்தியும் ஒன்றே. ஒரே பொருள் ஒருவனுக்கு நீர் ஆகவும், மற்றொருவனுக்கு உறை பனிக்கட்டியாகவும் இருக்கின்றது.

சிவன் ஞான சொருபம் விஷ்ணு பக்தி சொருபம் சிவ உபாசனை பண்ணுகிறவன் ஞானியின் இயல்பைப் பெறுகின்றான். விஷ்ணு உபாசனை பண்ணுகின்றவன் பக்தனுடைய இயல்பைப் பெறுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு - திருவாய்மொழி

பாடியவர் - பெரியாழ்வார்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல் லாண்ட திண்கோள் மணிவண்ணா! உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு! 1

அடியோ மோடுநின் னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதிவ வத்துறை யும்சுட
ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமு ழங்கும் அப் பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே. 2

ஏழு நிலத்தி லிடுவதன் முன்னம் வந்
தெங்கள் குழாம்புகுந்து
கூடு மனமுடைய யீர்கள் வரம் பொழி
வந்தொல்லைக் கூடுமினோ
நாடு நகரமும் நன்கறி யநமோ
நாராய ணாய வென்று
பாடு மனமுடைப் பந்தருள் ளீர்வந்து
பல்லாண்டு கூறுமினே. 3

எந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன்
ஏழ்படி கால் தொடங்கி
வந்து வழிவழி ஆட்செய்கின் றோம், திரு
வோணத் திருவிழவில்
அந்தியம் போதி லரியுரு வாகி
அரியை யழித்தவனை
பந்தனை தீரப்பல் லாண்டு பல்லாயிரத்
தாண்டென்று பாடுதுமே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுத்துக் களைத்தநின் பீதக வாடை
உடுத்துக் கலந்ததுண்டு
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன
சூடுமித் தொண்டர்களோம்
விடுத்த திசைக்கரு மம் திருத் தித்திரு
வோணத் திருவிழவில்
படுத்தபைந் நாகணைப் பள்ளிகொண்டானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே

## புராணம் — பிரபந்தம்

அற்புதன் நாரா யணன் அரி வாமணன்,
நிற்பது மேவி யிருப்பதென் னெஞ்சகம்,
நற்புகழ் வேதியர் நான்மறை நின்றதிர்
கற்பகச் சோலைத் திருக் கடித் தானமே. (நம்)

நன்னெஞ்சே! நம் பெருமான் நாளும் இனிதமரும்
அன்னம்சேர் கானல் அணியாலி கைதொழுது
முன்னம்சேர் வல்வினைகள் போகமுகில் வண்ணன்
பொன்னம் சேர் சேவடிமேல் போதணியப் பெற்றோமே (தி.ம)

பச்சை மா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே!
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோக மாளும்,
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே! (தொண்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரா யிரமாய் உலகேழ் அளிக்கும்
பேரா யிரம் கொண்ட தோர்பீ டுடையன்
காரா யினகா ளநன்மே னியினன்,
நாரா யணன்நங் கள்பிரான் அவனே.

அறிந்தன வேத அரும் பொருள் நூல்கள்
அறிந்தன கொள்க அரும் பொருள் ஆதல்,
அறிந்தனர் எல்லாம் அரியை வணங்கி,
அறிந்தனர் நோய்கள் அறுக்கும் மருந்தே. (நம்)

## திருப்புகழ்

காலனிடத் தணுகாதே
காசினியிற் பிறவாதே
சீல அகத் தியஞான
தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே
மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே
நாககிரிப் பெருமானே. (அருணகிரி)

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸ்வஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷ்ணு ஆலயங்களில் பாடவேண்டியவை
## மகோற்சவம் – கொடியேற்றம்

### கணபதி தாளம்

பண்:- தக்கராகம் இராகம்:- காம்போதி

தாளம்:- ரூபகம்

பிறப்பகத்தே மாண்டொழிந்த
பிள்ளைகளை நால்வரையும்,
இறைப்பொழுதில் கொணர்ந்துகொடுத்
தொருப்படுத்த வுறைப்பனூர்,
மறைப் பெருந்தீ வளர்த்திருப்பார்
வருவிருந்தை யளித்திருப்பார்
சிறப்புடைய மறையவர் வாழ்
திருவரங்க மென்பதுவே. (பெரியாழ்வார்)

### கெருடதாளம் (மூஷிக, இடப)

பண்:- காந்தார பஞ்சமம் இராகம்:- கேதாரகௌளை

தாளம்:- ஆதி

கண்ணனை மாயன் றன்னைக்
கடல்கடைந் தமுதங் கொண்ட,
அண்ணலை அச்சு தனை
அனந்தனை அனந்தன் றன்மேல்,
நண்ணிநன் குறைகின் றானை
ஞாலமுண் டுமிழ்ந்த மாலை
எண்ணுமா றறிய மாட்டேன்,
யாவையும் யவரும் தானே (நம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிம்மதாளம்

பண்:- நாட்டபாடை  இராகம்:- கெம்பீரநாட்டை

தாளம்:- ரூபகம்

நண்ணாதார் முறுவலிப்ப
நல்லுற்றார் கரைந்தேங்க,
எண்ணாராத் துயர் விளைக்கும்
இவையென்ன உலகியற்கை?
கண்ணாளா! கடல் கடந்தாய்!
உனகழற்கே வரும் பரிசு,
தண்ணாவா தடியேனைப்
பணிகண்டாய் சாமாறே (நம்)

## மயூரதாளம்

பண்:- இந்தளம்  இராகம்:- மாயாமாளவ கௌளை

தாளம்:- ரூபகம்

கண்ணபி ரானை விண்ணோர்
கரு மாணிக்கத் தையமுதை,
நண்ணியும் நண்ணகில்லேன்
நடுவேயோ ருடம்பிலிட்டு,
திண்ண மழுந்தக் கட்டிடப்
பலசெய்வினை வன்கயிற்றால்,
புண்ணை மறையவரிந்
தெனைப் போரவைத்தாய்புறமே (நம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷ்ணு ஆலய மகோற்சவ காலம் நவ சந்திகளில் பாடவேண்டியவை

## பிரம்ம சந்தி (மத்தி)

பண்:- மேகராகக் குறிஞ்சி இராகம்:- நீலாம்பரி

தாளம்:- ரூபகம்

கச்சொடு பொற்சுரிகை காம்பு கனகவளை,
உச்சி மணிச்சுட்டி ஒண்தாள் நிரைப்பொற்பூ
அச்சுதனுக்கென் றவனியாள் போத்தந்தாள்,
நச்சு முலையுண்டாய் தாலேலோ,
நாராயணா அழேல் தாலேலோ (பெரி)

## இந்திர சந்தி (கிழக்கு)

பண்:- காந்தாரம் இராகம்:- நவரோஸ்

தாளம்:- ரூபகம்

அறிந்தன வேத அரும்பொருள் நூல்கள்,
அறிந்தன கொள்க அரும்பொருள் ஆதல்,
அறிந்தனர் எல்லாம் அரியை வணங்கி,
அறிந்தனர் நோய்கள் அறுக்கும் மருந்தே (நம்)

## அக்கினி சந்தி (தென்கிழக்கு)

பண்:- கொல்லி இராகம்:- நவரோஸ்

தாளம்:- ஆதி

வரம்பிலாத மாயை மாய!
வையமேழும் மெய்மையே,
வரம்பிலூழி யேத்திலும் வ
ரம்பிலாத கீர்த்தியாய்,
வரம்பிலாத பல்பிறப்ப
றுத்துவந்து நின்கழல்,
பொருந்துமாதி ருந்த நீவ
ரஞ் செய்புண்ட ரீகனே..! (திருமழிசை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யம சந்தி (தெற்கு)

பண்:- கௌசிகம் இராகம்:- பைரவி

தாளம்:- ஆதி

வெண்ணெய்தா னமுது செய்ய
வெகுண்டுமத் தாய்ச்சி யோச்சி,
கண்ணியார் குறுங்க யிற்றால்
கட்ட வெட்டென்றி ருந்தான்,
திண்ணமா மதிள்கள் சூழ்ந்த
தென்திருப் பேருள், வேலை
வண்ணனார் நாமம் நாளும்
வாய்மொழிந் துய்த்த வாறே! (திருமங்கை)

## நிருதி (தென்மேற்கு)

பண்:- நட்டபாடை இராகம்:- கெம்பீரநாட்டை

தாளம்:- ஆதி

வைகுந்தம் புகுதலும் வாசலில் வானவர்,
வைகுந்தன் தமரெமர், எமதிடம் புகுகென்ற,
வைகுந்தத் தமரரும் முனிவரும் வியந்தனர்,
வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே (நம்)

## வருணன் (மேற்கு)

பண்:- சீகாமரம் இராகம்:- நாதநாமக்கிரியை

தாளம்:- ஆதி

தான நகர்கள் தலைசிறந் தெங்கெங்கும்,
வானிந் நிலம்கடல் முற்றுமெய் மாயற்கே,
ஆன விடத்துமென் னெஞ்சும் திருக்கடித்
தான நகரும், தனதாயப் பதியே (நம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாயு (வடமேற்கு)

பண்:- தக்கேசி　　　　இராகம்:- காம்போதி

தாளம்:- ரூபகம்

அணியனாகும்தன தாளடைந் தார்க்கெல்லாம்,
பிணியும் சாரா பிறவி கெடுத்தாளும்,
மணிபொனேய்ந் தமதிள் சூழ்திருக் கணபுரம்
பணிமின்நா ளும்பர மேட்டிதன் பாதமே.

## குபேரன் (வடக்கு)

பண்:- தக்கராகம்　　　　இராகம்:- காம்போதி

தாளம்:- ஆதி

பழகு நான்மறை யின்பொரு ளாய், மதம்
ஒழுகு வாரண முய்ய வளித்த, எம்
அழக னாரணி யாய்ச்சியர் சிந்தையுள்,
குழகனார் வரில் கூடிடு கூடலே! (நாச்)

## ஈசானன் (வடகிழக்கு)

பண்:- (சாலாபாணி) சாதாதி　　　　இராகம்:- பந்துவராளி

தாளம்:- ஆதி

வைய மெல்லா முடன் வணங்க
வணங்கா மன்ன னாய்த்தோன்றி,
வெய்ய சீற்றக் கடியிலங்கை
குடிகொண் டோட வெஞ்சமத்து,
செய்த வெம்போர் நம்பரனைச்
செழுந்தண் கானல் மணநாறும்,
கைதை வேலிக் கண்ணபுரத்
தடியேன் கண்டு கொண்டேனே (திருமங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ ஆலயங்களில் கொடியேற்றும் பொழுது ஸ்தம்பத்தடியில் ஓதவேண்டிய திருமுறைகள்

# கணபதி தாளம்

பண்:- தக்கராகம் இராகம்:- காம்போதி

தாளம்:- ரூபகம்

தழுக் கொள் பாவந்தளர வேண்டுவீர்
மழுக் கொள் செல்வன் மறிசேரங்கையான்
குழுக் கொள் பூதப் படையான் கோலக்கா
விழுக்கா வண்ண மேத்தி வாழ்மினே (சம்)

**தாளம் - ஆதி**

வெஞ்சுடராடுவர் துஞ்சிருண்மாலை
வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சடை கண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சடை மாளிகை சூழ்தரு
பாச்சிலாச்சிராமத் துறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி
வாடச் சிதை செய்வதோ விவர்சீரே. (சம்)

**தாளம்:- ஆதி**

தொழுவாரிருவர் துயர்நீங்கவே
யழலா யோங்கியருள்கள் செய்தவன்
விழவார் மறுகில் விதியால் மிக்கவெம்
மெழிலார் சோற்றுத்துறை சென்றடைவோமே. (சம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூஷிக (இடப) தாளம்

பண்:- காந்தார பஞ்சமம் இராகம்:- கேதாரகௌளை

தாளம்:- ஆதி

இடரினுந் தளரினுமென துறு நோய்
தொடரினு முனகழற்றொழு தொழுவேன்
கடறனிலமுதொடு கலந்த நஞ்சை
மிடறினிலடக்கிய வேதியனே
யிதுவோ வெமை யாளுமாறீவ
தொன்றெமக்கில்லையே
லதுவோ வுனதின்னருளாவடு துறையானே (சம்)

வாழினுஞ் சாவினும் வருந்தினும் போய்
வீழினுமுனகழல் விடுவேனல்லேன்
றாழிளந் தடம்புனறயங்கு சென்னி
போழிள மதிவைத்த புண்ணியனே
யிதுவோ எமையாளுமாறீவ தொன்றெமக்கில்லையே
லதுவோ வுனதின்னருளாவடு துறையானே.

கையது வீழினுங் கழிவுறினுஞ்
செய் கழலடியலாற் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாய சென்னி
மைய்யணி மிடறுடை மறையவனே
யிதுவோ வெமையாளுமாறீவ தொன்றெமக்கில்லையே
லதுவோ வுனதின்னருளாவடு துறையானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிம்மதாளம் (சிங்கம்)

பண் – நட்டபாடை இராகம்:– கம்பீரநாட்டை

தாளம்:– ரூபகம்

நீர் பரந் துநிமிர் புன்சடை மேலோர்
நிலா வெண் மதிசூடி
ஏர்பரந் தவின வெள்வளை சோரவென்
னுள்ளங் கவர் கள்வன்
ஊர் பரந் தவுல கின்முத லாகிய
வோரூ ரிது வென்னப்
பேர் பரந் தபிர மாபுர மேவிய
பெம்மா னிவனன்றே. (சம்)

தாளம்:– ஆதி

அந்தமு மாதியும் நான்முகனு
மரவணை யானும றிவரிய
மந்திர வேதங்களோது நாவர்
மருகனிலாவிய மைந்த சொல்லாய்
செந்தமி ழோர்கள்ப ரவியேத்துஞ்
சீர்கொள் செங்காட்டங்கு டியதனுள்
கந்தம கிற்புகை யேகமழுங்
கணபதி யீச்சரங் காமுறவே. (சம்)

தாளம்:– மிஸ்ரசாபு

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்றபாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றினோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே (சுந்)

## மயூர தாளம்

பண்–காந்தாரம் இராகம்:–மாயாமாளவகௌளை

தாளம் – ஆதி

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே (சம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளம் - ஆதி

அஞ்சுகோ லாமவர் ஆடரவின்படம்
அஞ்சுகோ லாமவர் வெல்புலனாவன
அஞ்சுகோ லாமவர் காயப்பட்டான்கணை
அஞ்சுகோ லாமவர் ஆடினதாமே (அப்)

பித்தாபிறை சூடிபெருமானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேன் எனல் ஆமே (சுந்)

## ஸ்ரீ ராமகிஷ்ணர் உபதேசம்

சாதகன் ஒருவன் ஞானக்கண்ணைப் பெற்றாகவேண்டும் மனது தூயதாகும் பொழுது அத்தூய மனதே ஞானக்கண்ணாக வடிவெடுக்கின்றது.

நான் ஓர் இயக்கத்தை உண்டு பண்ணியிருக்கின்றேன். நான் மக்களுக்கு ஹிதோபதேசம் செய்கின்றேன் என்று எண்ணுகின்ற அகங்காரம் பக்குவமாகாத அகங்காரம்.

யான் எனது என்னும் செருக்கு மெய்ப்பொருளை மறைத்திருக்கின்றது.

விரும்பிய மாத்திரத்தில் ஒருவன் துறவியாய் விடமுடியாது அவனுக்கு பிராரப்தகர்மம் ஜன்மாந்திர வாசனைகள் ஆகியவைகள் குறுக்கிட்டு நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவசந்திகளில் ஓதவேண்டிய தேவாரப் பண்கள்

## பிரம்மசந்தி (மத்தி)

பண்:- மேகராகக் குறிஞ்சி இராகம்:- நீலாம்பரி
தாளம்:- கண்ட சாபு

விடலேறு படநாக மரைக்கசைத்து
வெற்பரையன் பாவையோடும்
அடலேறொன் றதுவேறி யஞ்சொலீர்
பலியென்னு மடிகள்கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி
னுடன்வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங்
கீன்றலைக்குந் திருவையாறே (சம்)

**தாளம் - ஆதி**

நீறுசேர்வதொர் மேனியர் நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை யண்ணலே (சம்)

## இந்திரசந்தி (கிழக்கு)

பண்:- காந்தாரம் இராகம்:- நவரோஸ்
தாளம்:- ரூபகம்

வேதத்திலுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத்தகுவது நீறு உண்மையிலுள்ளது நீறு
சீதப்புனல்வயல் சூழ்ந்த திருஆலவாயான் திருநீறே (சம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாளம் - கண்டசாபு**

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே (அப)

**தாளம் - ஆதி**

கரையும் கடலும் மலையும் காலையுமாலையுமெல்லாம்
உரையில் விரவி வருவான் ஒருவான் உருத்திரலோகன்
வரையின் மடமகள் கேள்வன் வானவர் தானவர்க்கெல்லாம்
அரையன் இருப்பதும் ஆரூர் அவர் நம்மையுமாள்வரோ கேளீர் (சுந்)

## அக்கினி சந்தி (தென்கிழக்கு)

பண்:- கொல்லி இராகம்:- நவரோஸ்

தாளம்:- மிஸ்ர சாபு

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகக்திகு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே (சம்)

**தாளம் - ஆதி**

நெஞ்சம்முமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சமிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலுமென்னீர் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே. (அப்பர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யமசந்தி (தெற்கு)

பண்:- கௌசிகம் இராகம்:- பைரவி

தாளம்:- ஆதி

காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதனாமம் நமச்சிவாயவே (சம்)

**தாளம் - ரூபகம்**

குற்றம்நீ குணங்கள்நீ கூடல்ஆல வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ யருத்தமின்பமென்றிவை
முற்றும்நீ புகழ்ந்து முன் உரைப்பதென் முகம்மனே (சம்)

**தாளம் - ரூபகம்**

சொல்வாரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லாரேனு மியம்புவ ராயிடினும்
எல்லாத்தீங்கையு நீக்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

## நிருதிசந்தி (தென்கிழக்கு)

பண்:- நட்டபாடை இராகம்:- கம்பீரநாட்டை

தாளம்:- ரூபகம்

அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கையலர் மேய
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒருநெறிய மனம்வைத்துணர் ஞானசம்பந்தனுரை செய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தலெளிதாமே. (சம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாளம் - ரூபகம்**

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன் மிசைசிறு நுண்துளி சிதற
ஆமாம்பிணை யணையும் பொழிலண்ணாமலையண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார் வினையிலரே (சம்)

**தாளம் - மிஸ்ரசாபு**

கொன்றுசெய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்றபாவ வினைகள் தாம் பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றினோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே.

## வருணசந்தி (மேற்கு)

பண்:- சீகாமரம் இராகம்:- நாதநாமக்கிரியை

தாளம்:- திரிபுடை

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே (சம்)

**தாளம் - கண்டசாபு**

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல் கணத்தார்க்கு
அட்டிட்டல்காணாதே போதியோ பூம்பாவாய் (சம்)

**தாளம் - கண்டசாபு**

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையாலும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே (சம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாயு சந்தி (வடமேற்கு)

பண்:- தக்கேசி இராகம்:- காம்போதி

தாளம்:- ஆதி

ஞானத்திரளாய் நின்றபெருமானல்ல வடியார்மேல்
ஊனத்திரளை நீக்குமதுவுமுண்மைப் பொருள்போலும்
ஏனத்திரளோ டினமான் கரடியிழியு மிரவின்கண்
ஆனைத்திரள்வந் தணையுஞ் சாரலண்ணா மலையாரே (சம்)

**தாளம் - திரிபுடை**

அந்தணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக்காப்பது காரணமாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வல்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்அடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே. (சுந்)

# குபேரசந்தி (வடக்கு)

பண்:- தக்கராகம் இராகம்:- காம்போதி

கரியவன் நான்முகன் கைதொழு தேத்தக்
காணலுஞ் சாரலு மாகா
எரியுரு வாகியூ ரைய
மிடுபலி யுண்ணியென் றேத்தி
வரியா வல்குல்ம டந்தையோர் பாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்
விரிமல ராயின தூவி
விகிர்தன சேவடி சேர்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாளம் - கண்டசாபு**

குரும்மைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினை நன்கறிந்து
விரும்பும்வரம் கொடுத்தவளை வேட்டருளிச்செய்த
விண்ணவர் கோன் கண்ணுதலோன் மேவிய ஊர்வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே (சுந்)

## ஈசான சந்தி (வடகிழக்கு)

பண்:~சாலாபாணி(சாதாரி) இராகம்:~ பந்துவராளி

தாளம்:~ கண்டசாபு

எந்தமது சிந்தைபிரி யாதபெரு மானென
இறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு தீபமலி
வாய்மை யதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய
அமர்கின்ற அழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு மேவுபதி
சண்பை நகரே.

**தாளம் - ஆதி**

திடமலி மதிலணி சிறுகுடி மேவிய
படமலி அரவுடை யீரே
படமலி அரவுடை யீர்உமைப் பணிபவர்
அடைவதும் அமருல கதுவே (சம்)

தலையே நீவணங்காய் – தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய் (அப்பர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

வினைப்போக மேயொரு தேகங்கண்
டாய் வினை தானொழிந்தால்
தினைப்போ தளவுநில் லாதுகண்
டாய்சிவன் பாதநினை
நினைப்போரை மேவு நினையாரை
நீங்கிந் நெறியினின்றால்
உனைப்போ லொருவருண் டோமன
மேயெனக் குற்றவரே.

ஒன்றென் றிருதெய்வ முண்டென்
றிருவுயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம்
பார்நல் லறமுநட்பும்
நன்றென நிருநடு நீங்காம
லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக்
கேயுப தேசமிதே.

என்செய லாவதி யாதொன்று
மில்லை யினித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப் பெற்
றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று
மில்லைப் பிறப்பதற்கு
முன் செய்த தீவினை யோவிங்ங
னேவந்து மூண்டதுவே.

மாதாவுடல் சலித்தாள் வல்வினையேன்
கால் சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே – நாதா
இருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னைக்
கருப்பையூர் வராமற் கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயர் இறந்தபின் உடலுக்கு எரியூட்டியபோது பாடிய பாடல்

ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் – செய்யவிரு
கைப்புறத்திலேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி 1

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
யந்திபக லாச்சிவனை யாதரித்துத் தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன் 2

வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலுந் தோள் மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன் 3

நொந்து சுமந்து பெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே யந்தி பகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன் 4

அரிசியோ நானிடுவே னாத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் – உருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே யென வழைத்த வாய்க்கு 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி யடுவ தரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் – மெள்ள
முகம்மேல் முகம் வைத்து முத்தாடி யென்றன்
மகனே யென வழைத்த வாய்க்கு 6

விருத்தம்

முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்
அன்னையிட்ட தீ யடிவ யிற்றிலே
யானுமிட்ட தீ மூள்க மூள்கவே 7

வெண்பா

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுதே பாவியே னையகோ – மாசுக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை 8

வெந்தாளோ சோணகி ரிவித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ – சந்ததமும்
உன்னையே நோக்கி யுகந்து வரங்கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய் 9

வீற்றிருந்தாளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தா ளின்று வெந்து நீறானாள் – பால் தெளிக்க
எல்லீரும் வாருங்களேதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சரஸ்வதி கந்தையா அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

**பிறப்பிடம்:— 529, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.**

சைவமும் தமிழும் இரு கண்களாகப் போற்றும் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில், திருமடந்தை நாயக முதலி வம்சத்தில், அந்நியர் ஆதிக்கத்தினால், சைவமும் தமிழும் சிதைவுறாமல் பாதுகாத்து வளர்த்தெடுத்த தவத்திரு ஆறுமுகநாவலர் அவர்களின் பரம்பரையில் சின்னத்தம்பி நாகமுத்துவுக்கும் மனைவி ஆச்சிமுத்துவுக்கும் நான்காவது குழந்தையாகப் பிறந்தார்.

இவரது தாய் மாமனார், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள வேதாந்த மடத்தின் ஸ்தாபகரும், பெரியசுவாமி எனப் போற்றப்படுபவருமாகிய கனகரெத்தினம் என்ற நாமமுடைய மகான் ஆவார்.

சிறிய தந்தையார், கதிரவேலு சுவாமிகள் என்றழைக்கப்படுபவர். நல்லூர் தேரடியில் செல்லப்பா சுவாமிகளிடம் தீட்சை பெற்ற மகான் ஆகும். இவர் செய்த பூர்வ புண்ணிய பலன் ஞானிகளின் வாரிசாகப் பிறக்கும் வாய்ப்பைப் பெற்றார்.

சுவாமி விவேகானந்தர் அவர்கள் அமெரிக்காவில் பல்லாயிரக்கணக்கான அமெரிக்க மக்கள் முன்னிலையில் உரையாற்றுகையில், 'அமெரிக்கர்கள் தமது தந்தையர் அல்லது மூதாதையர் ஓர் உயர் பதவியில், அந்தஸ்தில் உள்ளவர்கள் என்று கூறுவதில் பெருமிதமடைவார்கள். ஆனால் ஓர் இந்தியரோ தன் தந்தையோ அல்லது மூதாதையரோ ஒரு சிறந்த இறைபக்தன், துறவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஞானி என்று கூறுவதில் பெருமையடைகின்றான்' என்று கூறினார். இவ்வகையில் பார்க்கும்போது திருமதி கந்தையா சரஸ்வதி அவர்களும்ஞானிகளின் வாரிசு என்பதில் பெருமைக்குரியவராகும்.

இவர், பூரணம்மா, சண்முகநாதன், சோமசுந்தரம் ஆகிய மூவரையும் மூத்த சகோதரங்களாகவும், சின்னத்தம்பி (இராசரெத்தினம்) என்பவரை இளைய சகோதரனாகவும் கிடைக்கப்பெற்றார்.

ஆரம்பக்கல்வியை அயலில் உள்ள பரமேஸ்வராக் கல்லூரியில் கற்றதுடன், அந்நாளைய கலாச்சார ஒழுங்குகளின்படி பெற்றோருக்கு உதவியாக வீட்டிலேயே தனது கடமைகளைச் செய்து வந்தார்.

வளர்ந்து பருவமெய்தியதும், மானிப்பாய் பரராச முதலி வம்சத்தில் பிறந்தவரும் ஆசிரியத்தொழில் புரிந்தவருமாகிய செல்லையா கந்தையா என்பவரைக் கணவனாக வாய்க்கப் பெற்றார். கணவருடன் இலங்கையின் பல பாகங்களிலும் சென்று வாழ்ந்து வந்தார். இதன் பலனாக இரு புதல்விகளுக்குத் தாயாகும் பாக்கியத்தைப்பெற்றார்.

மூத்த புதல்வி குமரேஸ்வரி யாழ் சுண்டுக்குளி மகளிர் பாடசாலையில் உயர் கல்வி கற்றார். வயது வந்ததும் அச்சுவேலி பத்தைமேனியை பிறப்பிடமாகக் கொண்ட நமசிவாயம் புவனேந்திரன் என்னும் அரச சேவையாளரைத்திருமணம் செய்தார். அவர்கள வழி மலர், விக்கினேஸ்வரன், குகனேஸ்வரி, என்ற மூன்று பேரப்பிள்ளைகளையும் கலைவாணி, மாதினி என்ற இரு பூட்டப்பிள்ளைகளையும் கிடைக்கப் பெற்றார்.

இளைய புதல்வி மங்கயற்கரசி இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறைப்பட்டதாரியானார். யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மகாலிங்கம் (பொறியியலாளர்) அவர்களை திருமணம் புரிந்து கொண்டார். யாழ் வசாவிளான் மகாவித்தியாலயம், கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றினார். அவர்கள் வழி மயூரன், மதனன், மஞ்சுதன் ஆகிய மூன்று பேரப்பிள்ளைகள் கிடைக்கப்பெற்றார்.

1976இல் கணவரை இழந்து தவித்தார். இதன் பின் மக்களுடன் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமாக வாழ்ந்து வந்தார். 1987இல் மகள் குடும்பத்துடன் அவுஸ்ரேலியாவில் வேலைவாய்ப்புப் பெற்று புலம் பெயர்ந்து வாழத்தொடங்கினார். இதற்கு இலங்கையில் யாழ்ப்பாணத்தில் நேர்ந்த இனக்கலவரங்கள் காரணமாகின. தாயாரும் சிறிது காலத்தில் அவுஸ்ரேலியா சென்று மகளின் குடும்பத்தினருடன் வாசம் செய்தார்.

அவர் தன் கணவனுடன் வாழ்ந்த காலத்திலும், பின்னர் கணவனை இழந்து மகளுடன் வாழ்ந்த காலத்திலும் தனது குடும்பமே கோவில் என்ற உணர்வுடன் குடும்பத்தினரின் சிறப்புகளில் பரிபூரண மகிழ்வும் பொலிவும் பெற்று வாழந்து வந்தார்.

2002ம் ஆண்டு ஆடித்திங்கள் 31ஆம் நாள் 16-08-2002 அன்று நவமித்திதியில் அவுஸ்ரேலியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் ஆத்மாசாந்தியடைய வேண்டி பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ammamma
## Om Jai Sai Ram

To all her grandchildren, the name ammamma is synonymous with time. She has been with us since the day we were born and even today her memory and love is instilled in every one of our hearts. He affection and love for all of us can never be forgotten. As one of her grandchildren, I would just like to write about the fond memories I have of my wonderful Ammamma.

During the time that we were in Sri Lanka, I remember a few things, one was that, Ammamma used to buy me toy guns. I used to love them so much, but I always found ways of breaking them somehow. Every time I did break them, Iwould go and ask Apa and Amma if they could buy me another one, but they always refused. So then I would go and ask my Ammamma if she could buy one for me and she always would. At the time I vagucly remember thinking to myself, that Ammamma was the greatest human on this Earth, because on one else would buy me a gun expcept her.

When she arrived in Austrlia, our house had only three bedrooms, and now there were six family members. So Idecided to share the bedroom with my ammamma. During that time, I remember watching the television show, Australia's Most wanted a few times. Usually I'd get nightmarcs that same night. So I'd jump off my bed and run and sleep next to my Ammamma, who had her own separate bed. She would lovingly accommodate me and cuddle me. I just remember feeling so secure when she did this and nothing would scare me at all after that.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

She would also snore during her sleep. So I'd find myself not able to sleep. What I would do to remedy this is that I would yell out her name, Ammamma reasonably loudly and she would suddenly shudder and the snoring would stop for a little while. But a few minutes later it would start up again. Later I learnt that all you could do was try and think about something so boring that it would put you to sleep quickly.

There were also times when my brothers and I would get up to mischievous deeds. So Apa, who was the disciplinarian, would pull out a cane from the trees in our garden and chase us trying to teach us a lesson. We soon realized that if we ran into our Ammamma's room. Apa would never do anything, because he would never go in there, as a sign of respect for his mother-in-law. So we'd hide in there until it was safe. During this time Ammamma would hug us and would secretly go and make us a cup of tea and bring it back for us. But later she too would scold us for our mischievours deeds.

Ammamma was not only loving towards us, bu t very much so with my mother. She would do everything that she could possibly do to make my mother's life easier for her. she would cut the vegetables, clean the driveways, rake the leaves from the garden, water the garden during the summer and order all three of us to do different tasks to help our mother. she was the foundation on which our husehold was built upon. She would always give advice to all of us, especially to Amma and she would always make sure the house was secure.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ammamma could never see one of her grandchildren hungry. If one of us was searching for food in the kitchen, Ammamma would secretly run towards Amma and ask her to prepare something for us, or she would prepare and give us something herself.

My grandmother was s simple woman. She did not want great wealth, to see the world or any other treasures. All she wanted was to see her family live happily and successfully. If at anytime, one of her family members would succeed at something, she was the hapiest of all. She loved being near and with her family. Even during her final days at the hospital, if one of her grandchildren walked in to see her, her eyes would light up with joy.

So all I wish to say is that all her family loved her dearly and that she will be missed so much.

I must say that I miss all the simple things that she used to do, such as telling us stories, scolding us, questioning us and her warm hugs. But I'm happy and grateful to God that she went without too much pain and suffering. So finally I'd like to thank my Ammamma for being everything for me and know that God will look after her wherever she is.

Sai Ram,

With lLove, From
Mauran, Manchuthan and Mathanan Mahalingam,
Malar Gengatharan, Vigneswaran and Kuganeswari
Grandchildren.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Dear Great Grand Mother
## Sri Ram

My great grand mother; words can't explain how great she is to my family and me. Before she came to Australia in 1990, Appa and Amma used tell me about her, Amma always talked about her because she is the one who always looked after Amma from the age of 2 years. So she was like a mother as well as a great grand mother. When she came to Australia, Appa told me my Pooti, which means great grandma has come, she will tell you a lot of stories. I was excited because I had never had nor seen my grand parents and when she came I was so glad and happy that I had someone older to call grandma. I called her what my parents called her. Achie. Whenever I would go to my aunts house I would go and see Achie first, because I liked to bother her by saying "Achiee saptingalo" meaning, Achie have you eaten. She would always given sweet smile at me and nod. That smile is still in my eyes, even today.

I remember is Sri Lanka, in a blur, whenever I would go to her house she would always given food. Even when she was here, in Australia, she would offer food or coffee, she



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

does not like to see any one go without food, tea or coffee. Once she stayed with us for one month in Aprial 1995, she came with us to the Geelong conference. She enjoyed the trip thoroughly, she was also so happy. Once I watched Unsolved My steries and Appa and Amma had gone out, so I ran to where Achie was in the room and sat beside her because I was afraid.

I will always think of her in my mind and heart and remember the good things; what she did and how she loved all her grand children and great grand children. Her love is always with us and is guiding us in everything we do in our lives. She will never be forgotten and may Swami bless her and may she rest in peace.

Shanthi Shanthi Shanthi
Peace Peace Peace

With Love From
Kalaivani and Mathini (Baby)
Great grand children

**அமுது மொழி**

சுருக்கெழுத்தும் கைரேகையும் அவற்றைப் படித்தவனுக்குத் தான் தெரியும் மற்றவனுக்கு அவைகள் வெறும் கோடாகத்தான் தெரியும். அதுபோல் கோயிலில் இருக்கும் கடவுளின் திருவுருவம் பக்தி உடையவனுக்குத்தான் தெய்வமாகத் தெரியும். மற்றவருக்கு கல்லாகத் தெரியும்.

- வாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நம்சிவாய

# சின்னமாமி

எனது தந்தையாரின் இளைய சகோதரி எனது சின்ன மாமி மானிட உருவம் தாங்கி 90 ஆண்டுகள் இப்பூவுலகில் பூரண வாழ்வு வாழ்ந்து இறைபதம் அடைந்தார்.

'மானிடர் ஆன்மா மரணமெய்தாது
மறுபடி பிறந்திருக்கும்'

கண்ணன் அருச்சுனனுக்கு உரைத்தது. முற்பிறவியில் செய்த கர்ம வினைப்பயனுக்கு ஏற்ப பிறவி வாய்க்கும்.

'உடை களையப்பட்டு விட்டது
புதிய உடையுடன் புதுப் பிறவி வாய்க்கும்'
இது என்றோ நிட்சயிக்கப்பட்ட ஒன்று.

உண்மைகள் அவை. அவை முற்றாக உணர்ந்து தெளிவடையாத நிலையில், சாதாரண மனித உறவுகள், அதனால் ஏற்படும் பாச பந்தங்கள், பிரிவுகள், மனதை நெகிழ்க்கும் நினைவுகள் எம்மைத் தாக்கவே செய்கின்றன. நாம் சாதாரண மனிதர்கள் பக்குவப்படாத ஆன்மாக்கள்.

இதிலிருந்து நாம் விடுபட, எமக்கு ஆன்மிக அறிவு வளர, மனது பக்குவமடைந்து எங்கும் நிறைந்த பரம் பொருளை உணர்ந்து தெளிவடைய, எல்லாம் வல்ல பரம்பொருளையே வேண்டி நிற்போம்.

என் சின்னமாமி சாதாரண குடும்பப் பெண்ணாக, குடும்பமே கோவிலாக, குடும்பத்தினரின் நல்வாழ்விலேயே கண்ணும் கருத்துமாக, இருந்து இறைவனை வேண்டி நல்வாழ்வு வாழ்ந்தார்.

அவரின் வாழ்வில் மனக்குறைகள் என்று எதுவும் இருந்திருக்க முடியாது. அது அவரின் பூர்வ புண்ணிய பலன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிறவியிலேயே பூர்வபுண்ணிய பலனாக ஞானிகளை மூதாதையர்களாகப் பெற்றவர். இனி வரும் பிறவியில் இறை உணர்வுபெற்று, தெளிவடைந்து ஆத்ம சாந்தியடைந்து, உலகபந்தங்களில் இருந்து பூரண விடுதலை பெற வேண்டி எல்லாம் வல்ல பரம்பொருளை மண்டியிட்டு மனதார வேண்டுகின்றோம்.

அவரின் ஞாபகார்த்தமாக வெளியிடும் இந்நூலை தொகுக்கும் வாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்ததையிட்டு மிக மகிழ்வுறுகின்றோம்.

'என் செயலாவது யாதொன்றுமில்லை தெய்வமே
உன் செயலே என்றுணரப் பெற்றேன்'

எனது சின்ன மாமியின் ஆத்ம சாந்தி வேண்டி ஏதாவது செய்ய வேண்டும் எனற அவாவுடன் என் குருநாதரை, என்பரம பிதாவை தரிசிக்கச் சென்றேன். எதுவும் நான் வாய்விட்டுக் கேட்கவில்லை. அன்று நாக வரத நாராயணர் கொடியேற்ற வைபவம் முடிவுற்ற வேளை.

என்னைத் திருநீறிட்டு ஆசீர் வதிக்கும் போது 'உனது தந்தையாரின் ஞாபகார்த்த வெளியீடு இவ் வேளைகளில் மிகவும் உபயோகமானது. அதனை திரும்பவும் பதிப்பித்தால் நல்லது' என்று கூறினார்.

'வேண்டுவார் வேண்டுதே ஈவான் கண்டாய்'
(மணிவாசகர்)

இறைவனே குருவடிவாக வந்து என்னைப் பணித்தார். அதுவே இப்பணி நிறைவேறுவதும் அவன் செயலே.

'என் மாமியின் ஆத்மசாந்தி வேண்டி
அடியேனின் பிரார்த்தனை ஆண்டவனால்
ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றே
கொள்ளவேண்டும்'.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி
ஓம் சற்குரு பாதமே சரணம்

மருமகள்
ச. ஓங்காரரூபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jai Sai Ram



Peace is the fragrant flower
Born of pure love

- Baba

Learn to give, Not to take
Learn to serve, Not to rule

- Baba

Help ever, hurt never

- Baba

Body is like a water Bubble,
Mind is like a mad monkey
Don't follow the body - Don't follow
the mind follow the conscience

- Baba



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எட்டு நற்குணங்கள் எவரிடம் உள்ளனவோ அவரே எனக்குப் பிரியமான பக்தர்' என்பது கீதை வாக்கியம்

1. ஆசையின்றி நமது முயற்சிகளில் ஈடுபடுவது. நாம் செய்யும் எல்லாவற்றையும், பயன் கருதாமல் இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய்ய முயன்றால் இந்த மனநிலையைப் பெற இயலும்.

2. தூய்மையுடன் இருப்பது, நீராடல், தூயஉடை, தூய சூழ்நிலை, ஆகியவை புறத் தூய்மையை அளிக்கும், சுயநலம் இல்லாத சேவை உள்ளத்தூய்மையை அளிக்கும்.

3. அகங்காரத்தை நீக்கிச் சமுதாய சேவை செய்வது. சமுதாயத்தில் ஒற்றுமை உணர்வைப் பெருக்க உறுதியான உள்ளத்துடன் முயன்று வாழ்க்கையின் குறிக்கோளான தெய்வத்துவத்தைப் பெறவேண்டும்.

4. பிறர் போற்றுதலையும் தூற்றுதலையும் பற்றிக் கவலைப்படாமல் சுகதுக்கம் லாபம், இழப்பு, உயர்வு தாழ்வு எல்லாவற்றையும் சமமாகவே பாவித்து நடப்பது. இவ்வாறு வாழ்ந்தால் வாழ்க்கையில் உண்மையான இன்பத்தை அடையலாம்.

5. சென்றதைப் பற்றிக் கவலைப்படாமல் இருப்பது, கடந்ததை மீண்டும் பெற முடியாது. வருங்காலத்தைப்பற்றி நமக்குத் தெரியாது. ஆகையால் நிகழ்காலத்தை நல்ல முறையில் கழிப்பதே சிறந்தது.

6. ஆடம்பரமின்றி எதையும் செய்வது. ஆடம்பரம் என்பது அரக்ககுணம். இதனால் 'ராகத்வேஷம்' என்ற விருப்பும் வெறுப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாகின்றது. தன்னையே தாழ்த்திக் கொள்ள முன் வரவேண்டும். தலைவனாக விரும்புவன் முதலில் சேவகனாக இருந்து அனுபவம் பெற வேண்டும்.

7. சுயநலமற்ற சேவை அதில் மட்டுமே மனச்சாந்தி கிடைக்கும். வாழ்க்கையில் வசதிகளும் செல்வமும் வந்து போகும். அவற்றை நாடி வாழ்க்கையை வீணாக்கி விடக்கூடாது. சுயநலமற்ற சேவை உள்ளே உள்ள தெய்வத்துவத்தைக் காட்டும் சாதனம் எனலாம். அதுவே ஆத்ம சுகம் தரும்.

8. திரிகரண சுத்தியுடன் செயல்படுவது. எண்ணம், சொல், செயல் மூன்று ஒன்றாக இருக்க வேண்டும். கணவன் – மனைவி – குழந்தை என்று மூன்று பேரும் சேர்ந்து இணைந்து இயங்காவிட்டால் வீட்டில் அமைதி இராது. சரீரத்தில் உள்ள மனம், வாக்கு, காயம் என்ற மூன்று கரணங்களும் அவ்வாறே இணைந்து இயங்காவிட்டால். சாந்தி இராது. உலகில் அமைதி இல்லாமைக்கு இதுவே காரணம். எட்டு நற்குணங்களுடன் தெய்வார்ப்பணமாக நமது வாழ்க்கையின் சிந்தனை, சொல், செயல்களில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வோம். அதுவே நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மை தரும்.'

20.11.90 அன்று பகவான் பாபா
நிகழ்த்திய அருளுரையிலிருந்து

**அமுது மொழி**

பெரிய நெருக்கடிகளுக்கிடையே தான் இறைவன் வெற்றி பெறுவதற்கான வழியையும் வகுத்திருக்கிறான்.

- ஹோம்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்ம ஈடேற்றத்திற்கு அபரக் கிரியைகளின் அவசியம்

கரணவாய் கை. திருஞானசம்பந்தக் குருக்கள்

ஆன்ம கோடிகள் யாவும் கடைத்தேறும் வண்ணம் வாக்கு மனாதீத கோசரமான பரம்பொருள் கருணை கொண்டு வேத சிவாகமங்களைச் சொல்லியுள்ளார். பொதுவாகவே தங்களில் சொல்லப்பட்ட வைகளை ஆகமங்களில் சிறப்பாகச்சொல்லியுள்ளார். இந்த ஆகமங்களில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு மார்க்கங்களையும் அவற்றைச் செய்து ஒழுகி வரவேண்டிய நெறி முறைகளையும் அதன் பயனையும் விரிவாகத் தந்துள்ளார். இவ்வாகம நெறி நின்று ஒழுகி அதன் பயனை முழுமையாகப் பெற்ற நால்வர் பெருமானார்கள் வரலாறு சான்றாகும்.

இனி ஆன்மாக்கள் தம் நலன் கருதி செய்து கொள்ளும் செயலுக்கு ஏற்ப, புண்ணிய பாவம் விளைந்து கொண்டே செல்லும் இப்புண்ணிய பாவப் பயனை அனுபவிக்கும் பொருட்டு சூக்கும தேகாதிகளை இறைவன் ஆன்மாக்களுக்கு கொடுக்கின்றான். இதனால் பிறந்தும் இறந்தும் உழல்கின்றது.

எப்பிறப்புக்களிலும் மானுடப்பிறப்பு அரிதினும் அரிது அதிலும் சைவசமயச் சார்பில் பிறப்பது புண்ணியத்தின் விளைவாகும். சைவசமயத்தில் பிறந்து சைவசமயத்திற்கு முழுமுதற்கடவுள் என்று துணிந்து அவனால் அருளிச் செய்யப்பட்ட வேத சிவாகம நெறி நின்று, வாழிபட்டு சைவ சித்தாந்த அத்துவித முத்தியை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு வாழ்வதே மானுடப்பிறப்பின் பயனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி நமது சுய தேவையின் நிமித்தம் எமது உடற் கருவி, கரணங்களைக் கொண்டு செய்கின்ற யாவும் தொழிற்செயல் என்று பெயர்பெறும். இதன் வாயிலாக வருகின்ற பயன் செய்தவரையே சாரும் இங்கே தான் புண்ணிய பாவம் தொடர்வதற்கு ஏதுவாகிறது. இது பசுபுண்ணியமாகும்.

இதே கருவி கரணங்களைக்கொண்டு இறைவனை நோக்கி செய்யப்படும் போது சரியை எனப் பெயர் பெறும். இதே கருவி கரணங்களோடு மந்திரங்களை இணைத்துப் பயன் படுத்தும் போது கிரியை எனப் பெயர் பெறும். மனம் என்கிற கருவியோடு மந்திரங்களைப் பயன்படுத்தும் போது யோகம் எனப் பெயர் பெறும். இம் மூன்று நெறிகளையும் பின்பற்றாத வழி கிரியையில் ஞானம் பெறப்படமாட்டாது. ஞானம் கிடைத்தற்கு இம் மூன்று நெறிமுறைகளும் அவசியமாகிறது. இதனால் பசு கரணம் பதி கரணமாகும். பதி கரணமாகும் போது வினை ஏறாது. ஆகவே கிரியாமார்க்கம் நின்று வாழிகாட்டிய ஞானசம்பந்தப் பெருமான் இம்மார்க்க நெறிநின்று வழி காட்டியது உணரக் கூடிய தொன்று.

மந்திரங்களோடு இணைத்து செய்யப்படும் கிரியை தான் முழுமையான பலனைத் தரமுடியும் மந்திரமின்றிக் கிரியைகள் பயன் தராதொழியும்.

கிரியா மார்க்க நெறி ஆன்மலாப, முத்திப் பேற்றிற்கு சிறந்த சாதனம் என்பது அறியக்கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மலாபக் கிரியைகள் இரண்டு வகைப்படும். ஒன்று பூர்வக்கிரியை மற்றது அபரக்கிரியை, அபரக்கிரியை என்ற மாத்திரத்தில் இதற்கு முன் பலகிரியைகள் உண்டு என்பது தானே பெறப்படுகிறது. அதுவே தான் பூர்வக்கிரியை என்பதாகும். இக்கிரியைகள் உபாயக் கிரியை என்றும் உண்மைக்கிரியை என்றும் தம்முள் இருவகைப்படும். உபாயக்கரியையின்றி உண்மைக் கிரியைபயன் தரமாட்டாது. இக்கிரியா மார்க்கத்தில் நின்றொழுகிய திருஞான சம்பந்த சுவாமிகள் வரலாறு விளக்கம் தருகின்றது.

சிவாகமங்களில் சொல்லப்பட்ட கிரியை முறைகளை எடுத்து பதினெண் சிவாச்சாரியர்கள் பதினெண்பத்ததிகளாக தொகுத்து வகைப்படுத்தியுள்ளார்கள். இந்த வரிசையில் அகோரசிவாச்சாரியர் செய்த பத்ததியே இன்று சைவ உலகில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சிவாச்சாரியார் செய்த பூர்வ, அபரக்கிரியை இரண்டிற்கும் நிர்மல மணிதேசிகர் செய்த வியாக்கியானமும் ஒன்று உண்டு, இந்த நூலை ஆதாரமாகக் கொண்டு ஆன்ம ஈடேற்றத்திற்கு அபரக்கிரியையின் அவசியம் என்ற தலைப்பின் கீழ் சிறு விளக்கம் எழுதப்படுகிறது.

அபரம் என்ற சொல்லில் 'அ' என்பது உயிர் 'பரம்' என்பது இறைவன் ஆகவே அபரக்கிரியையின் நோக்கம் என்னவென்றால் குரு ஆன்மாவை இறைவனோடு இரண்டறக் கலப்பித்தலாம்.

அன்மாவையும் இறைவனையும் கேவலப்படுத்தி வைத்திருக்கிற ஆணவ மலம், கன்ம மலம், மாயா மலம் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மலங்களையும் பிராயச்சித்தாகுதி மூலம் அதன் செயற்பாட்டை வலி குன்றச் செய்து ஆன்மாவை சுத்தமாக்கி கிரியையின் ஞான மார்க்கத்தை தலைப்படச் செய்தலாம்.

இதற்கு முன்புள்ள பூர்வக்கிரியையில் ஆன்மாவை குறித்துச் செய்யப்படும் கர்ப்பாதானம் முதலிய நாற்பது சமஸ்காரங்களும் சமய விசேட நிர்வாண தீட்சைகளும் சிவபூசை, ஜபம் தவம், தியானம் ஆகியனவும், தேச கால வர்த்தமானங்களால் ஏற்படுகின்ற தவறுதல்களையும் இந்த அபரக்கிரியையில் தான் விசேட ஆகுதி மூலம் நிவர்த்தி செய்து தீட்சாகிரமப்படி குரு அவ்வப்பதங்களில் சேர்த்து விடுவார்.

இதனால் மக்கள் பிறவி எடுத்தவர்கள் அனைவரும் தீட்சை பெற்றே ஆக வேண்டும் தீக்கை இன்றி கிரியையின் முழுமையான பலனைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பது சிவாகமங்களில் வலியுறுத்தப்படுகிறது.

அபரக்கிரியை மனிதப் பிறப்பு எடுத்த அனைவருக்கும் இன்றி அமையாது இக் கிரியை முறையை பெற்றக் கொள்ள முடியாத ஆன்மாக்கள் பிரேத்துவம் பிசாசத்துவம் நீங்காது காலா காலமாக பூவுலகில் பேயாய் பிசாசாய் அலைந்து திரிந்து நரகத்தில் சென்றடையும். ஆகவே இறந்த ஆன்மாவைக் குறித்து அந்தியக் கிரியை செய்யப்பட வேண்டியது அவசியம் என்பது புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணம்

மரணமானது இருவகைப்படும். ஒன்று இயற்கைமரணம் (சுமரணம்) மற்றது துன்மரணம் இயற்கை மரணம் தவிர்ந்த மரணங்கள் யாவும் துன்மரணமேயாம்.

## துன்மரணம்

இந்த துன்மரணம் இருவகைப்படும். அவை புத்தி பூர்வமரணம் என்றும் அபுத்திபூர்வ மரணம் என்றும் சொல்லப்படும். புத்தி பூர்வமரணமென்பது தான் தனது உயிரை வலோற் கட்டாயமாக விடுதல். அபுத்தி பூர்வமரணமென்பது ஆதிதைவீகம் ஆதிபௌதீகம் ஆதி ஆத்மீகம் ஆகிய வழிகளைச் சாட்டாக வைத்து உயிர் பிரிகிறது இவை அனைத்து மரணங்களும் துன்மரணமேயாம்.

புத்தி பூர்வமாக உயிர் பிரிந்த விடயத்தில் கிரியைகள் யாவும் ஆறுமாத எல்லையில் சுபநாளில் செய்து கொள்ளப்படும். உடல்காணாமற் போனவர் உடல் சிதறுப்பட்டு இறந்தவர் விடயத்தில் ஒரு வருட எல்லையிவல் கிரியைகள் செய்யப்பட வேண்டும். இக்கிரியைகள் யாவும் சாந்தி செய்து செய்யப்படும்.

துன்மரணமானவர் விடயத்தில் ஸ்மிருதியைப் பிரமாணமாகச் சொல்லி நாற்பத்தைந்து நாளிலும் மூன்றுமாத எல்லையிலும் சாந்தி செய்து கிரியையைச்செய்த முடிக்கிறார்கள். இவை ஆகமபிரமாணத்திற்கு முரணானவை. துன்மரணம் அடைந்தவருக்கு உடன் எதுவித கிரியையும் சொல்லப்படவில்லை. இப்படி இறந்த ஆன்மாக்கள் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி சலவாசல், மலவாசல் வழியாகப் பிரிந்து இருட்பூமியை நோக்கிச் சென்று போய் விழுந்து இன்ப துன்ப அனுபவ மின்றி பாடாணம் போற்கிடக்கும். இப்படிக் கிடக்கும் ஆன்மாவிற்கு கிரியையாற் எது வித பயனும் ஏற்படாது.

இப்படி இறந்தவர்களின் உடலை மண்ணிற் புதைத்துவிட்டு, ஆறுமாத ஒருவருட எல்லையில் சாந்தி பூர்வமாக அந்தியேட்டி செய்வதற்கு எலும்பில் ஒரு பகுதியை எடுதது அந்தியேட்டி செய்யப்பட வேண்டும். எலும்பு கிடைக்காத விடயத்தில் தர்பையில் வைத்து செய்யலாம் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு முன் செய்யப்படும் கிரியைகளால் அவ்வான்மாவிற்கு எது வித பலனும் கிடைக்கப் போவதில்லை என்று விதிப்பிரமாணம் சொல்லுகிறது.

## உயிர் பிரியும்போதுள்ள கிரியை

உயிரோடு இருக்கும் போதும் இறந்த பிற்பாடும் கிரியைகள் மூலம் செய்யப்படும் சடங்குகள் யாவும் ஆன்மாவின் விமோசனத்தின் பொருட்டேயாம். வஸ்த்தை உயிர் பிரியுமுன் கிரியா பூர்வமாக தசதானம் என்கின்ற பத்துத் தானங்களும் செய்து கொள்ள வேண்டும். பின்பு பிரணாவஸ்த்தைப்படும் நேரம்பார்த்து இறப்பவரது வாயில் பஞ்சினால் பாலைத் தொட்டுவாயில் உமியக் கொடுக்க அந்த நேரம் அவ்வாணன்மாவிற்கு களைப்பு நீங்கி சிறு தெளிவு ஏற்படும் அப்பொழுது இறைத்தியானம் உண்டாவதற்காக பிரணவம், மூலமந்திரம் காதில் ஓதி, விபூதி தரித்து உக்கிருந்தி கோதானம் என்ற பசுவின் வாலைப்பிடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பவரது கையில் கொடுத்து தேவார திருவாசகம் முதலிய திருமுறைகளை ஓத வேண்டும். அந்நேரம் அவ்வான்மா பூத உடலை நீத்து சூக்கும தேகத்தோடு புண்ணிய பாவம் வழிகாட்ட சுவர்க்க நரகங்களைச் சென்றடையும். போகிற பாதையைத் தாண்டி 'விவதரணி' என்ற அகளியுடைய ஆற்றங்கரைவரை போய் அடையும். ஆற்றைக்கடக்க ஒரு கோதானம் செய்யப்படும் இப் புண்ணியத்தின் உதவியினால் சுகமாக ஆற்றைக் கடந்து இயமபுரம் போய் அடைந்து இன்ப துன்பங்களை அநுபவித்து மீண்டும் பிறப்பு எடுத்து உழலும். இதுவே ஆன்மவரலாறாகும்.

இத்துன்பம் தொடராதபடி ஆகமநெறி நின்று ஒழுகிவருவோ-மாயின் பிறப்பறுத்து பிறவா இன்பம் பெறுவோம்.

இறந்த சிவயோகியானவரின் உடலை சுத்த ஜலத்தினால் குளிப்பாட்டி வெள்ளை வஸ்திரம் தரித்து, விபூதி அணிந்து, தர்பையைப் பரப்பி அந்த உடலை தர்பையின் மேல் தெற்குத்தலை இருக்கக் கூடியதாகப்படுத்தி தலைமாட்டில் விளக்கேற்றி வைத்து ஆண்கள் முதல் சேமங் கொள்ள வேண்டும். பின்பு பெண்கள் அழவேண்டும். அதன்பின் புமரண ஆசௌகம் தொடங்குகிறது. அடுத்து சூர்ணோத் சவக்கிரியையாம்.

## சூர்ணோத்சவக் கிரியை

இக்கிரியை ஆன்மாக்களுக்கு மங்களம் உண்டாகும் பொருட்டு செய்யப்படும். இக்கிரியை ஆலய உற்சவகாலத்து தீர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாவன்று செய்யப்படுகிறது. இக்கிரியை மரணமடைந்தவர் வீட்டிலும் செய்யப்படுகிறது. இது அமங்கள வீட்டில் மங்களம் உண்டாகும் பொருட்டு செய்யப்படுகிறது. இங்கு இரண்டு இடத்தும் சுண்ணம் இடிப்பதன் ஒற்றுமை என்ன என்பதனை அறிய வேண்டியது அவசியமாகிறது.

'ரஜசூர்ணம்' என்பது மஞ்சள் தூள் இந்த மஞ்சள் மங்களப்பொருள், மஞ்சள் நிறத்தை பஞ்சசாதாக்கியவடிவத்தில் தத்புருட முகத்தில் தாங்கி, மஞ்சள் வடிவாக அருளுகிறான். தத் புருடமுகம், புருஷவடிவம் அத்தனையும் பொருந்தி இருக்கிறது. இறைவனும் மனிதனும் எந்த வகையிலும் வேறுபாடற்ற நிலையில் இருக்கிறான். எண்பத்தொருதரம சொல்லி எண்குணம் உண்டாகவும் பக்தஸ்தோரங்கள் சொல்லி எட்டுத்தரம் இடித்து மஞ்சளை எடுத்து இறைவனுக்கும் சிவயோகிக்கும் அபிடேகம் செய்யவேண்டும். இம் மஞ்சளை மக்களுக்கு கொடுப்பதால் சிவபக்தர்களாவதற்கு காரணமாகிறது. பிரேதத்திற்கு அபிஷேகிப்பதால் சிவயோகியாகிறான். இந்நிலை உண்டாகும் பொருட்டு சுண்ணமிடித்தலாகும். அடுத்து பூத தேகத்தை விடுவது ஆன்மாவிற்கு ஒரு மங்களம், மஞ்சள் அபிஷேகம் செய்வதால், எண்குணம் பொருந்தி மோட்சத்திற்கும் மேலுள்ள கிரியைகளுக்கும் தேகம் சுத்தமாகிறது.

**தகனம்**

இறந்தவரது பிரேதத்தை சுடுகாடு நோக்கி தெண்பக்கம் தலையாகக் கொண்டு சென்று முதல் தலைப்பக்கமாக இறக்கி பின்பு கால்ப்பக்கம் இறக்கி தூக்கி கட்டையில் தெற்குத் தலையாகக்கிடத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்க்கரிசி போடவேண்டும். முதல் பானையை எடுத்து இடதுதோழில் வைத்து பானைக்கு ஒரு துவாரம் செய்து அல்லது பானையின் கழுத்தை எடுத்தாவது இடமாகச் சுற்றி வந்து பானையை இறக்கி தலைப்பக்கம் வைத்து இந்த பானைத் தண்ணீரில் எடுத்து வாய்க்கரிசியோடு கலந்து பொன் அல்லது பவுண் ஆகியவற்றில் ஒன்றுடன் சேர்த்து கர்த்தா இடது முழங்காலை கட்டையில் பொருத்தவைத்துக் கொண்டு பிரேதத்தின் வாயில் போட வேண்டும். அசௌசகாரரும் போடலாம். பின்பு பானையை எடுத்து இருமுறை சுற்றிவந்து சிரசில் கொள்ளியை பிரணவம் சொல்லி வைத்துவிட்டு முன்பக்கமாக குடத்தைப் போட்டு உடைத்து விடுவதால் இந்த ஆன்மாவின் பஞ்சபூத தேகமானது அழிந்தது என்ற பொருளாகும்.

கர்த்தா பூணூல், பவுத்திரம் இரண்டையும் கழற்றி கால்பக்கம் போட்டு விழுந்து வணங்கி திரும்பிப்பாராது வீடு போகவும்.

**அஸ்தி சஞ்சயனம்**

இறந்த நாளிலிருந்து 2 ஆம், 3ஆம் நாள்களில் காடாற்றலாம். எரிந்த நெருப்பை தண்ணீரினால் நனைத்து விட்டு அபிசேகங்களை முடித்துவிட்டு, தலைப்பக்கம் பால் நிரப்பி, முக்காலியில் வைத்து அப்பாலில் முழந்தாள், தொப்புழ், நெஞ்சு, சிரசு ஆகிய இடத்தில் உள்ள எலும்பை எடுத்து வைத்து, மிகுதி அஸ்தியை ஒரு பாத்திரத்தில் அள்ளி எடுத்துகொண்டு அந்த இடத்தை உழுது நவதானியம் விதைத்து விட்டு அஸ்தியை எடுத்து தீர்த்தத்தில் போட்டு ஸ்நானம் செய்து நக்கின தானம் கொடுக்கவும். என்புகள் எடுத்து வைப்பது அந்த ஆன்மாவின் சிவலோகப்பயணத்திற்கு இடையூறாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நக்கினதானம்

கர்த்தா புரோகிதரை அழைத்து தீர்த்தக் கரையை அடைந்து இறந்தவரின் பொருட்டு வேட்டி அல்லது சேலை, அரிசி காய்வகை கொடுத்து திலதர்ப்பணம் செய்வது இது இறந்தவர் நிர்வானநிலை நீங்கும் பொருட்டேயாம்.

## அந்தியேட்டி

அந்தியேட்டி என்பதன் பொருள் அந்தியகாலத்துச் செய்யப்படும் யாகம்.

இவ்வந்தியேட்டிக்கிரியை சமயாசார வலுவுள்ளவருக்கு சூரண உத்சவ கிரியை முடித்து பிரேதம் சிவாக்கினியால் தகிக்கப்படும். ஆசாரமுடையார்க்கும் உடன் சுடுகாட்டில் வைத்து அந்தியேட்டி நடைபெறும். மற்றவருக்கு 30 ஆம் நாள் செய்யப்படும். இக்கிரியை கர்மயோக பிராயச்சித்தத்தின் பொருட்டு செய்யப்படும். இதனால் ஆன்மா மோட்சம் அடைவதற்கு நிமித்தமாகிறது. கிரியைகள் யாவும் மந்திரம் பாவனையோடு இணைத்துச் செய்யப்படும். கிரியா மார்க்கம் நின்றொழுகியவர்களுக்கு ஞானம் பெறுவதற்கு இம்மார்க்கமே சிறந்த வழியாகும். பிரதானமாக இக்கிரியையில் பஞ்சாட்சரத்தோடு, நாமத்தை சொல்லி கிரியைகள் செய்யப்படும். அதனால் மலகா்ம பாசங்களை வலிகெடச் செய்து ஆன்ம சைதன்னியத்தை பிரகாசிக்கச் செய்து இறைவனது சைதன்னியத்தோடு சேர்த்து விடுவதே இக்கிரியையின் பயனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ருத்திரபலி

இக்கிரியை மாட்டுமால் அல்லது தீர்த்தக்கரையில் வைத்து செய்ய வேண்டியது. ஏகாதசருத்திரர்களை குறித்து செய்யப்படும் வழிபாடானது இறந்தவரின் சந்ததியாரின் விமோசனத்திற்கும் சுபீட்சத்திற்குமாக செய்யப்படும். ருத்திரர்களை திருப்திப்படுத்தும் முகமாக வாழைப்பழம், பச்சையரிசி, தேங்காய்துருவல், சர்க்கரை ஆகியவற்றைக் கலந்து பிண்டம் போடுவதால் ஏழேழு சந்ததியாரும் பயன் பெறுகிறார்கள். மேற்படி பொருள்களோடு எள்ளுக் கலந்து பிண்டம் போடுவதால் பிதிரர்களும் திருப்தி அடைகிறார்கள். இக்கிரியை அக்கினி காரியத்தோடு செய்யலாம்.

## பாடான பூசை

ருத்திர கும்பத்தை ஸ்தாபித்து பூசை முடித்து கும்பத்திற்கு முன்பாக கருங்கல் அல்லது செங்கல் ஏதாவதொன்ற சட்டியில் வைத்து கர்த்தாவைக் கொண்டு இறந்தவர் நாமத்தால் பூசிப்பித்து அபிஷேகாதிகளைச் செய்து எள்ளு, சீலை தர்ப்பை ஆகிய மூன்றினாலும் தர்பணம் செய்து அவரவர் ஆசௌசக் கணக்களவு பச்சையரிசிக் சாதத்தோடு கறிவகைகளையும் சேர்த்து பிண்டமிடவேண்டும். பின்பு இறந்தவரின் திருப்திக்காக சோறு, கறி வகை, பலகார வகை, பட்சணவகை, படைத்து நிவேதித்து, ஏகபிண்டம் கல்லில் வைத்து தர்பணம் செய்து, ஆராதனை செய்து பஞ்சபுராணம்பாடி கர்த்தா கல்லில் பூசித்த ஆன்மாவை எடுத்து ருத்திர கும்பசிவத்தில் ஐக்கியப்படுத்தலாம். இக்கிரியை ஆன்மாவின் இச்சை நீங்கும் பொருட்டுச் செய்வனவாம். பின்பு கும்பம், பாடரணம், பிண்டம ஆகியவற்றை எடுத்து தேரில் வைத்து தீர்த்தக்கரையை அடைந்து தண்ணீரில் சென்று வடக்குமுகமாக நின்று கொண்டு பிண்டம் பாடாணத்தை முறையே தலைக்கு மேலாக விட்டு பின்பு கும்பத்தை வடக்கு நோக்கி நீரில் விட்டு பூணூல் பவுத்திரம் அகியவற்றையும் கழற்றி விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்நானம் செய்து விபூதி தரித்து வஸ்திரத்தால் தலையை மூடியபடி வீடுபோய் சேரவேண்டும்.

**ஆலாத்தி**

வேப்பிலை, வெண்கடுகு, பசுமாடு ஆகியவற்றை மார்த்தும் தின்று நெருப்பில் போட்டு அம்மியில் மிதித்து வலம் வந்து ஆலாத்தி எடுப்பது இது கண்திட்டியையும் நாதிட்டியையும் போக்குவதற்காகச் செய்யப்படும்.

**சபிண்டீகரணம்**

இக்கிரியை சபிண்டம் சமானோதகர் என்ற முறையில் செய்யப்படும் சபிண்டர் என்பது ஒத்த தேகத்தை உடையவராகுதல் இது சாரூப நிலையைக் குறிக்கும். சமானோதகர் பாலும் நீரும் போல கலந்த நிலை உண்டாக்குதல் இது சாயுச்சியநிலையைக் குறிக்கும் முந்தியது சமயவிசேஷதீக்கை உடையாருக்கும் பிந்தியது நிர்வான தீக்கையோடு குரு முதலானவர்களுக்கும் செய்யப்படும். கிரியை ஆமசிரார்தமாக முந்தியவர்களுக்கும் அன்ன சிரார்த்தம்மாக பிந்தியவர்களுக்கும் செய்யப்படும். இது அக்கினி கார்ய பூர்வமாக நடைபெறும். இக்கிரியைகள் பிதிர் தேவர்களையும், விஸ்வதேவர்களையும் திருப்திப்படுத்த செய்வதாகும். இதனால் வரும்பயனை இவ் ஆன்மா அனுபவிக்க வகை செய்வர்.

கர்த்தாவின் அநித்தியம் காரணமாக இக்கிரியைகள் யாவும செய்து முடிக்கப்படும். பின்பு மாசிகங்கள் சொல்லப்பட்ட திதிகளில் செய்யலாம். வருட முடிவில் ஆண்டுத் திதியைச் செய்து முடிக்கும் போது பூரண நிலையில் சிவபதப்பிராப்தி ஆவார்.

கர்தா ஆண்டுத் திதிமுடியுமுன் சுபகாரியங்களிலோ அல்லது ஆலயவிடயங்களிலோ பங்கு கொள்வது தவறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

16-08-2002 இல் சிவபத-
மடைந்த எமது தாயார் நோயுற்று
வைத்தியசாலையில் இருந்தவேளை வருகைதந்து
ஆறுதலளித்த எம் இனிய நாண்பர்களுக்கும்,
உறவினர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத்
தெரிவிக்கின்றோம். இவர் இறந்த செய்தியறிந்து
வந்துதவியோர்கட்கும், அந்திமக்கிரிகைளில் கலந்து-
கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றியைத்
தெரிவிக்கின்றோம். அவரது ஆத்மசாந்திக் கிரியைகளில்
பங்குகொண்டவர்களுக்கும் இன்றைய (21-09-2002) நிகழ்வில்
பங்குகொண்டு எம்மை மகிழ்வித்த அனைவருக்கும் எமது சிரந்தாழ்ந்த
நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விக்ரோறியா,
அவுஸ்திரேலியா.

இங்ஙனம்,
பிள்ளைகள்
குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி
## PEDIGREE

Thirumadanthai Nayaga Muthaliyar Vamsam
Thirunelveli
திருமடந்தை நாயக முதலியார் வம்சம்
திருநெல்வேலி

↓

Sinnathamby Nagamuththu
சின்னத்தம்பி நாகமுத்து
+
Achchimuththu
ஆச்சிமுத்து

↓

- Pooranammah / பூரணம்மா + Kandaih / கந்தையா
  - ↓ Ponnammah / பொன்னம்மா
- Shanmuganathan / சண்முகநாதன் + Nagaledchumy / நாகலெட்சுமி
  - ↓ Ongararoopy / ஓங்காரரூபி
- Somasundram / சோமசுந்தரம்
- **Saraswathi** / **சரஸ்வதி** + Kandaiha / கந்தையா
  - ↓ Kumareswary / குமரேஸ்வரி + Puvanendhiran / புவனேந்திரன்
    - ↓ Malar / மலர் + Gengatharan / கெங்காதரன்
      - ↓ Kalaivani / கலைவாணி
    - Vickneswaran / விக்கினேஸ்வரன்
    - Kuganeswary / குகனேஸ்வரி + Vinayagamoorthy / விநாயகமூர்த்தி
      - ↓ Mathini / மாதினி
  - ↓ Mangayatkarasy / மாங்கயற்கரசி + Mahalingam / மகாலிங்கம்
    - ↓ Mayooran / மயூரன்
    - Mathanan / மதனன்
    - Manchuthan / மஞ்சுதன்
- Sinnathamby / சின்னத்தம்பி + Sivapakiyam / சிவபாக்கியம்
  - ↓ Arulmolithevy / அருள்மொழிதேவி
  - Nirmalathevy / நிர்மலாதேவி
  - Mahatheva / மகாதேவா
  - Somatheva / சோமதேவா
  - Sritheva / சிறீதேவா
  - Sutharsana / சுதர்சனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வம்சாவழி**
**PEDIGREE**

Pararajasegara Muthaliyar Vamsam
Manipay
பரராஜசேகர முதலியார் வம்சம்
மானிப்பாய்

↓

Murugesu Chellaiah
முருகேசு செல்லையா
+
Thangammah
தங்கம்மா

↓

- Sinnathamby / சின்னத்தம்பி + Sivapakiyam / சிவபாக்கியம்
  → Arulmolithevy / அருள்மொழிதேவி
  - Nirmalathevy / நிர்மலாதேவி
  - Mahatheva / மகாதேவா
  - Somatheva / சோமதேவா
  - Sritheva / சிறீதேவா
  - Sutharsana / சுதர்சனா
- Suppiah / சுப்பையா
- **Kandaiah / கந்தையா**
- Visaladchchi / விசாலாட்சி + Karthigesu / காத்திகேசு
  → Ponnammah / பொன்னம்மா
- Kanagaratnam / கனகரத்தினம் + Annapooranam / அன்னபூரணம்
  → Pathmanathan / பத்மநாதன்
- Sinnathurai / சின்னத்துரை + Theivanaipillai / தெய்வானைப்பிள்ளை
  → Siva / சிவா
- Iyaththurai / ஐயாத்துரை + Sathiyaledchumy / சத்தியலெட்சுமி
  → Thayanithy / தயாநிதி
  - Thangeswaran / தங்கேஸ்வரன்
  - Jegathambigai / ஜெகதாம்பிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR SINCERE THANKS TO

**All who participate in the funeral of our mother.**

**Those who send their condolence**

**by telephone and by letters.**

**Those who participate and give pleasure to**

**us today in this function (21.09.2002)**

*Thanks*

ஹரிஹரனைன் பிரிண்டேர்ஸ் (தனியார்) நிறுவனம்,
424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல :- 021-2717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org